# சுபீட்சம்

சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

e-Paper | 05 புதன்கிழமை ஆகஸ்ட் 2026 | 05 Wednesday Augus 2026 | Switzerland Edition



Food is our trade · World is our Market

Sai Trader GmbH since 1991

Importeur für frische, Gemüse | Früchte & Fische

Fresh Vegetables • Fruits • Fish

Importer of Fresh, Quality Food Products



Aufeldstrasse 9, 5300 Turgi, Switzerland.

+41 44 885 66 50

+41 79 218 70 75

saitrader.import@gmail.com

www.saitrader.ch

உயர்தரமான புதிய, காய்கறிகள் | பழங்கள் | மீன்கள் | திருப்தியான சேவை

மேலதிக தகவலுக்கு www.saitrader.ch





சுவிட்சலாந்தின் 735-ஆவது தேசிய தினத்தை முன்னிட்டு, பிரபல சுவிஸ் இணைய ஊடகமான Watson வெளியிட்ட 'சுவிட்சலாந்தை நாம் நேசிக்கும் 100 காரணங்கள்' என்ற சிறப்புப் பட்டியல், நாட்டின் தனித்துவங்களையும் மக்களின் வாழ்வியல் பண்புகளையும் வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது.

இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள 100 அம்சங்கள், சுவிட்சராந்தின் இயற்கை


மிகுதி 03 ஆம் பக்கத்தில்...


## சுவிட்சர்லாந்தில் அதிக வருமானம் பெறும் மில்லியனர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகள் வெளியீடு

சுவிட்சர்லாந்தில் ஆண்டுக்கு 1 மில்லியன் சுவிஸ் பிராங்குக்கு மேல் வருமானம் பெறும் 7,666 பேர் இருப்பதாக கூட்டாட்சி வரி நிர்வாகம் (ESTV) வெளியிட்ட தரவுகள் தெரிவிக்கின்றன.

நகரங்களின் அடிப்படையில் சூரிக் முதலிடத்தில் உள்ளது. இங்கு 482 பேர் ஆண்டுக்கு 1 மில்லியன் பிராங்குக்கு மேல் வருமானம் பெறுகின்றனர்.


மிகுதி 04 ஆம் பக்கத்தில்...


## உலகின் வாழ்வதற்கு சிறந்த நகரங்கள் 2026: சூரிச் 5 வது இடம், ஜெனீவா 6 வது இடம்

Economist Intelligence Unit (EIU) வெளியிட்டுள்ள 2026 ஆம் ஆண்டின் உலகின் வாழ்வதற்கு சிறந்த நகரங்கள் பட்டியலில், சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரம் கடந்த ஆண்டை விட மூன்று இடங்கள் சரிந்து 5-வது இடத்தை பிடித்துள்ளது. ஜெனீவா தொடர்ந்து 6-வது இடத்தில் உள்ளது.


மிகுதி 03 ஆம் பக்கத்தில்...





importas Cash & Carry

தரம் நம்பிக்கை சிக்கன விலை அனைத்தும் ஒரே இடத்தில்!



இலங்கை, இந்திய, ஆசிய உணவுப் பொருட்கள்

அரிசி & மாவும் பொருட்கள் | மசாலா பொருட்கள் | பருப்பு வகைகள் & தானியங்கள் | மளிகைப் பொருட்கள் & தினசரி தேவைகள்

ZÜRICH RETAIL SHOP



Importas Cash & Carry

Baslerstrasse 102, 8048 Zürich

(80m away From Letzi Park)

Tel: +41 43 343 03 55

Fax: +41 43 343 03 56

Email: info@importas.ch

OPENING HOURS
Mon – Fri 10:00 – 20:00
Sat 09:00 – 18:00

BERN RETAIL SHOP



Importas Cash & Carry

Kranichweg 8, 3074 Muri Bei Bern

Tel: +41 31 951 24 44

Email: bern@importas.ch

OPENING HOURS
Mon – Thu 09:00 – 19:00
Fri 09:00 – 19:00
Sat 08:00 – 18:00

சிறந்த தரம் | மலிவான விலை | நம்பகமான சேவை | உங்கள் தேவைகள் – எங்களிடம்!


ZUVERLÄSSIG. SAUBER. PÜNKTLICH.
IHR PARTNER FÜR JEDE AUFGABE.
NOLIMIT ONE
GmbH
REINIGUNG.
TRANSPORT.
UMZUGSHILFE.
ALLES AUS EINER HAND –
FÜR PRIVAT UND GEWERBE.
REINIGUNG
Sauberkeit, auf die Sie sich verlassen können.
TRANSPORT
Sicher, schnell und zuverlässig ans Ziel.
UMZUGSHILFE
Wir unterstützen Sie beim Umzug – stressfrei und effizient.
ZUVERLÄSSIG
Termingerecht und vertrauensvoll
ERFAHRENES TEAM
5–10 motivierte Mitarbeitende
FLEXIBEL
Kurzfristig einsatzbereit
FAIRE PREISE
Top Qualität zu fairen Konditionen
WARUM NOLIMIT ONE?
Professionelle Arbeit & höchste Qualität
Moderne Ausrüstung & 2 Nutzfahrzeuge
Privatkunden, Firmen & Verwaltungen
Individuelle Lösungen für Ihren Bedarf
Termingerecht & zuverlässig
JETZT ANFRAGEN
Wir sind für Sie da!
Kostenlose Beratung.
078 222 2126
nolimitone26@gmail.com
Ostschweiz
Unterwegs für Sie in der Region
Jeder Auftrag
wird mit Sorgfalt und Respekt ausgeführt
Nachhaltig
Umweltbewusst handeln für eine saubere Zukunft
No Limit One – wir machen den Unterschied.
www.nolimitone.ch


தமிழின் குரலாய்
அக்கினி fm
Akkini
CLICK HERE

அழகு, ஜனநாயக மரபு, சமூக ஒழுக்கம், பாதுகாப்பு, உயர்ந்த வாழ்க்கைத் தரம் மற்றும் பல்வேறு பாரம்பரியங்களை ஒருங்கிணைத்து எடுத்துரைக்கின்றன.

பட்டியலில் முதலிடத்தில், உலகப் புகழ்பெற்ற நேரம் தவறாத பொதுப் போக்குவரத்து சேவை இடம்பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து, நகரங்களுக்குள்ளேயே நீந்தக்கூடிய அளவுக்கு தூய்மையாகப் பராமரிக்கப்படும் ஆறுகள் மற்றும் ஏரிகள், உலகப் புகழ்பெற்ற சுவிஸ் சாக்லேட், பல்வேறு சீஸ் வகைகள், பனிமூடிய ஆல்ப்ஸ் மலைத்தொடர்கள் மற்றும் மாட்டர்ஹார்ன் சிகரம் ஆகியவை இடம்பிடித்துள்ளன.

மேலும், மக்களின் நேரடி பங்கேற்பை உறுதி செய்யும் நேரடி ஜனநாயக முறை, நான்கு தேசிய மொழிகளுடன் கூடிய பல்மொழிக் கலாச்சாரம், அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கிடையேயும் நிலவும் நாகரிகமான உரையாடல், பாதுகாப்பான சமூக சூழல், உலகத் தரமான கல்வி மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவை சுவிட்சராந்தின் முக்கிய பலங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மறுசுழற்சி கலாச்சாரம், குடிக்கத் தகுந்த குழாய் நீர், ஒழுங்காகப் பராமரிக்கப்படும் சாலைகள், துல்லியமான அஞ்சல் சேவை, நம்பகமான பொதுச் சேவைகள் ஆகியவை அன்றாட வாழ்க்கையின் தரத்தை உயர்த்தும் அம்சங்களாக பட்டியலில் இடம்பெற்றுள்ளன. அதேவேளை, ''En Guete'' என்று உணவுக்கு முன் வாழ்த்தும் பழக்கம், மலைப் பாதைகளில் நடைபயணம், Alphorn இசை, Raclette மற்றும் Fondue போன்ற பாரம்பரிய உணவுகள், Victorinox சுவிஸ் Army Knife, SBB செயலி, Rega அவசர மீட்பு சேவை, Roger Federer, Granit Xhaka போன்ற உலகப் புகழ்பெற்ற ஆளுமைகள் மற்றும் தேசிய விளையாட்டு மரபுகளும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

இந்த 100 காரணங்களில் மிகவும் கவனத்தை ஈர்த்த இறுதி கருத்து, 'சில நேரங்களில் சுவிட்சலாந்தை விமர்சித்தாலும், இறுதியில் இதையே தங்கள் இல்லமாக நேசிப்பது' என்பதாகும். ஒரு நாட்டின் மீது கொண்டுள்ள உண்மையான அன்பு என்பது அதன் சிறப்புகளைப் பாராட்டுவதோடு மட்டுமல்லாமல், அதன் குறைகளைச் சுட்டிக்காட்டி மேலும் சிறந்த நாடாக வளர வேண்டும் என்ற எண்ணத்தையும் கொண்டிருப்பதாக அந்தச் செய்தி வலியுறுத்துகிறது. தேசிய தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட இந்த சிறப்புப் பட்டியல், சுவிட்சராந்து என்பது வெறும் மலைகள், ஏரிகள் மற்றும் வங்கிகளின் நாடு மட்டுமல்ல; ஒற்றுமை, பொறுப்புணர்வு, ஜனநாயகம், பல்துறை கலாச்சாரம் மற்றும் உயர்ந்த வாழ்க்கைத் தரம் ஆகியவற்றின் அடையாளமாக உலகில் மதிக்கப்படும் நாடு என்பதையும் மீண்டும் ஒருமுறை நினைவூட்டுகிறது.




● நேரம் தவறாத பொதுப் போக்குவரத்து.
● தூய்மையான ஆறுகளும் ஏரிகளும்.
● ஜாஸ் (Jass) எனும் பாரம்பரிய அட்டவணை விளையாட்டு.
● வெளிநாடுகளில் விடுமுறை செலவுகள் ஒப்பீட்டளவில் மலிவு.
● உலகப் புகழ்பெற்ற சுவிஸ் சாக்லேட்.
● தரமான உணவுப் பொருட்கள் கொண்ட பல்பொருள் அங்காடிகள்.
● இனிமையான சுவிஸ் வட்டார மொழிகள்.
● பனிச்சறுக்கும் பனிமலைகளும்.
● நேரடி ஜனநாயகம்.
● தூய்மையும் ஒழுங்கும்.
● அந்நியருக்குக் கூட வணக்கம் கூறும் பழக்கம்.
● அனைவருக்கும் கல்வி வாய்ப்பு.
● குடிக்கத் தகுந்த குழாய் நீர்.
● பொதுக் குடிநீர் ஊற்றுகள்.
● சுவிஸ் நடுநிலை வெளிநாட்டு கொள்கை.
● உலகத் தரத்தில் போட்டியிடும் விளையாட்டு வீரர்கள்.
● அரசியலில் நாகரிகமான உரையாடல்.
● மஞ்சள் நடைபயண வழிகாட்டிப் பலகைகள்.
● Aromat சுவையூட்டும் பொடி.
● புகழ்பெற்ற சுவிஸ் ரயில் நிலையக் கடிகார வடிவமைப்பு.
● நகரத்திலிருந்து சில நிமிடங்களில் இயற்கை.
● நேர்த்தி ஒரு தேசிய பண்பாடு.
● சிறந்த பொது உள்கட்டமைப்பு.
● நம்பகமான அஞ்சல் சேவை.
● திறமையான கழிவு மேலாண்மை.
● பல நூறு வகை சீஸ்கள்.
● இலவச காட்டு Grill இடங்கள்.
● அடக்கமும் எளிமையும்.
● சமரச அரசியல்.
● Schwingen (சுவிஸ் மல்யுத்தம்).
● Robidog நாய் கழிவு பைகள்.
● கால்பந்து மைதானத்தில் Bratwurst மற்றும் பீர்.
● வலுவான சுவிஸ் ஃப்ராங்க்.
● ஒவ்வொரு வீட்டையும் அறிந்த அஞ்சல் ஊழியர்கள்.
● ஆண்டு முழுவதும் Raclette மற்றும் Fondue.
●Granit Xhaka போன்ற தேசிய வீரர்கள்.
●SBB செயலி.
● ஒவ்வொரு ஆர்வத்திற்கும் ஒரு சங்கம்.
● Alphorn இசை.
● உண்மையான மெழுகுவர்த்திகளுடன் கிறிஸ்துமஸ் மரம்.
● பல்வேறு நாடுகளின் உணவகங்கள்.
● பேக்கரிகளின் மொறுமொறுப்பான ரொட்டி.
● மறுசுழற்சி கலாச்சாரம்.
● Zweifel உருளைக்கிழங்கு சிப்ஸ்.
● Miliz (குடிமக்கள் சேவை) கொள்கை.
● W. Nuss von Bmpliz சாக்லேட்.
● சிவில் சேவை (Zivildienst).
● தேசிய அணிக்கு மக்களின் ஒற்றுமை.
● குட்டி போட்டிகள் குடும்ப நிகழ்வாக இருப்பது.
● இரவு நேர பாதுகாப்பு.
● நீச்சல் குளத்தில் பணப்பையை வைக்கக்கூடிய நம்பிக்கை.
● SAC மலைக் குடில்கள்.
●நெருப்பில் வறுத்த Cervelat.
●Victorinox சுவிஸ் Army Knife.
● Zopf, வெண்ணெய், ஜாம் சேர்த்த ஞாயிறு காலை உணவு.
● கோடை இசை விழாக்கள்.
●Skilift-இல் ஒலிக்கும் ''Hudig-ggeler'' இசை.
● Roger Federer.
● Matterhorn மலை.
● புதிதாக வெட்டப்பட்ட புல்வெளியின் மணம்.
● பூண்டு நசுக்கும் கருவி, உருளைக்கிழங்கு தோல் சீவும் கருவி போன்ற கண்டுபிடிப்புகள்.
●ஒவ்வொரு மலையிலும் கேபிள் கார் வசதி.
●வில்லியம் டெல் வரலாறு.
●இலையுதிர் கால பனிமூட்டக் காட்சி.
●உயர்ந்த ஊதியங்கள்.
●இலையுதிர் கால திருவிழாக்கள்.
● உலகத் தர மருத்துவ சேவை.
● அனைவருக்கும் மருத்துவக் காப்பீடு.
● குழிகள் இல்லாத சாலைகள்.
● நான்கு பருவங்கள்.
● குழந்தைகள் தனியாக பள்ளிக்குச் செல்லும் பாதுகாப்பு.
● Rega அவசர மீட்பு சேவை.
● நான்கு தேசிய மொழிகள்.
● Ovomaltine.
● உள்ளூர் பெருமையும் உலகத் திறந்த மனப்பான்மையும்.
● ஒவ்வொரு கிராமத்திலும் நீச்சல் குளம்.
● இத்தாலிக்கு விரைவில் செல்லும் வசதி.
● 99% மட்டுமே சரியாக இருந்தாலும் குறை கூறும் தரநிலை.
● ''En Guete'' என்று உணவுக்கு முன் வாழ்த்தும் பழக்கம்.
● தொலைதூர மலைக்கிராமங்களுக்கும் நேரத்தில் அஞ்சல்.
● மின்தூக்கியில் அமைதியாக இருப்பது.
● ''Momoll tiptop'' என்ற எளிய பாராட்டு.
● கிண்ணம் உயர்த்தி கண்களைப் பார்த்து வாழ்த்துவது.
● கோடை மழைக்குப் பின் வரும் மண்வாசனை.
● வெளிப்படையாக இல்லாவிட்டாலும் உதவும் மனப்பான்மை.
● Birchermesli.
● ஞாயிற்றுக்கிழமை அமைதியை மதித்தல்.
● கடலற்ற நாடாக இருப்பதால் கடலை அதிகம் ரசித்தல்.
● இலையுதிர் கால சூடான Marroni.
● நீடித்த தரமான கட்டிடங்கள்.
● Migros அல்லது Coop மீது தனிப்பட்ட விருப்பம்.
● மலைப்பயணத்தில் ஒலிக்கும் மாட்டுமணிகள்.
● Fasnacht திருவிழா.
● ஒவ்வொரு வீட்டிலும் Raclette மற்றும் Fondue உபகரணங்கள்.
● சுவிஸ் தேசியக் கொடி.
● ஆப்பிள் சாஸுடன் பாஸ்தா சாப்பிடும் பழக்கம்.
● பல தேசிய இன மக்களுடன் வாழும் சமூகம்.
● சுவிஸ் வட்டார நகைச்சுவை மற்றும் வசைச்சொற்கள்.
● ''E Stange'' என்று பியரின் அளவை மட்டும் கூறி ஆர்டர் செய்வது.
● சில நேரங்களில் சுவிட்சர்லாந்தை விமர்சித்தாலும், இறுதியில் இதையே தங்கள் இல்லமாக நேசிப்பது.

## உலகின் வாழ்வதற்கு சிறந்த நகரங்கள் 2026:

உலகின் மிகச் சிறந்த வாழ்விட நகரமாக டென்மார்க்கின் கோபன்ஹேகன் முதலிடத்தையும், ஆஸ்திரியாவின் வியன்னா இரண்டாவது இடத்தையும் தக்கவைத்துள்ளன. மெல்போர்ன் மற்றும் சிட்னி நகரங்கள் சூரிச்சை முந்தி முறையே 3 மற்றும் 4-வது இடங்களைப் பெற்றுள்ளன. சூரிச் மற்றும் ஜெனீவா நகரங்கள் சுகாதாரம் மற்றும் கல்வி பிரிவுகளில் முழு 100 மதிப்பெண்களை பெற்றுள்ளன. எனினும், கலாசாரம் மற்றும் சுற்றுச்சூழல் பிரிவில் குறைந்த மதிப்பெண்கள் கிடைத்ததே சூரிச்சின் தரவரிசை சரிவுக்கு முக்கிய காரணமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2026 உலகின் முதல் 10 வாழ்வதற்கு சிறந்த நகரங்கள்:

கோபன்ஹேகன் (டென்மார்க்), வியன்னா (ஆஸ்திரியா), மெல்போர்ன் (ஆஸ்திரேலியா), சிட்னி (ஆஸ்திரேலியா), சூரிச் (சுவிட்சர்லாந்து), ஜெனீவா (சுவிட்சர்லாந்து) ஓசாகா (ஜப்பான்), அடிலெய்ட் (ஆஸ்திரேலியா), வான்கூவர் (கனடா), டோக்கியோ (ஜப்பான்), சூரிச் தரவரிசையில் சற்று பின்னடைந்தாலும், உலகின் சிறந்த 10 வாழ்விட நகரங்களில் இரண்டு நகரங்களை கொண்ட ஒரே ஐரோப்பிய நாடுகளில் சுவிட்சர்லாந்தும் தொடர்ந்து இடம்பிடித்துள்ளது.




# சுவிஸ் விமான நிறுவனத்தின் வருவாய் உயர்வு: லாபம் குறைவு

சுவிட்சர்லாந்தின் தேசிய விமான நிறுவனமான SWISS International Air Lines, 2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் வருவாயை உயர்த்தியிருந்தாலும், செயல்பாட்டு லாபம் குறைந்துள்ளதாக அறிவித்துள்ளது.

நிறுவனத்தின் வருவாய் 3.2% அதிகரித்து 2.77 பில்லியன் சுவிஸ் பிராங்குகளாக பதிவாகியுள்ளது. ஆனால், செயல்பாட்டு லாபம் 3.2% குறைந்து 189.3 மில்லியன் சுவிஸ் பிராங்குகளாக சரிந்துள்ளது.

இந்த லாபக் குறைவிற்கு, ஈரான் போர் காரணமாக ஏற்பட்ட எரிபொருள் விலை உயர்வே முக்கிய காரணமாகக் கூறப்பட்டுள்ளது.

ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலத்தில் விமான எரிபொருள் செலவு சுமார் 50 சதவீதம் அதிகரித்ததாக நிறுவனத்தின் நிதித் தலைவர் டெனிஸ் வெபர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, விமான இயந்திரக் கோளாறுகள் காரணமாக பராமரிப்பு செலவுகளும் அதிகரித்துள்ளன. இருப்பினும், நீண்ட தூர Premium Class பயணங்களுக்கான தேவை வலுவாக இருந்ததுடன், நிறுவனத்தின் செலவுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இழப்பை ஓரளவு சமாளிக்க உதவியதாக குழுமம் தெரிவித்துள்ளது.

2026 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் SWISS நிறுவனம் 8.5 மில்லியன் பயணிகளை ஏற்றிச் சென்றுள்ளது. இது கடந்த ஆண்டைவிட 0.6% அதிகம். அதே நேரத்தில், இயக்கப்பட்ட விமானங்களின் எண்ணிக்கை 67,400 ஆக பதிவாகி, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.1% குறைந்துள்ளது.

## சுவிட்சர்லாந்தில் அதிக வருமானம் பெறும் மில்லியனர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகள் வெளியீடு

அதனைத் தொடர்ந்து Zug நகரில் 431 பேரும், ஜெனீவா மூன்றாவது இடத்திலும் உள்ளன.

ஆனால் மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில், Wollerau (Schwyz) நாட்டிலேயே அதிக மில்லியனர் அடர்த்தி கொண்ட நகரமாக திகழ்கிறது. அங்கு சுமார் 30 பேரில் ஒருவர் ஆண்டுக்கு 1 மில்லியன் பிராங்குக்கு மேல் வருமானம் பெறுகிறார்.

கான்டன் அடிப்படையில், சூரிக் கான்டனில் 2,013, ஜெனீவாவில் 883, Zug-இல் 860, மற்றும் Schwyz-இல் 774 வருமான மில்லியனர்கள் உள்ளனர். மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில் Zug கான்டனே அதிக மில்லியனர் அடர்த்தி கொண்ட பகுதியாக உள்ளது.

ஒப்பீட்டளவில், சுவிட்சர்லாந்தின் சராசரி ஆண்டு சம்பளம் 84,288 சுவிஸ் பிராங்குகள் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.


ellaalan Fresh
Zürich நகரில் ஞாயிற்றுக்கிழமைகளிலும்
உங்களுக்குத்தேவையான
இறைச்சி, மீன், அரிசி, மற்றும்
உடனடி மரக்கறிகள், மலிகைப்பொருட்களை
பெறவேண்டுமா எங்களிடம் வாருங்கள்.
ATTA RICE
BASMATI RICE
Moteren Strasse 9,
8005 Zürich.
TEL
044 543 48 84
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்!
FRESH QUALITY BEST PRICE
Freshness You Can Trust, Quality You Deserve!


TAMIL ECOAM STEDO SWISS TAMIL ECONCOPMECIZATION
STEDO
SWISS TAMIL ECONOMICS
DEVELOPMENT ORGANIZATION
உழைப்பால் இணைவோம்,
உயர்வாள் நிமிர்வோம்!
சுவிட்சர்லாந்து வாழ் தமிழ் வர்த்தகப் பெருமக்கள்,
இளம்தொழில்முனைவோர் மற்றும் புதிய
யோசனைகளுடன் முதலிட்டாளர்களை
ஒன்றிணைக்க செயற்படும் STEDO வில்
நீங்கள் இன்னும்
இணைந்து கொள்ளவில்லையா?
STEDOவில் இணைவோம் சாதிப்போம்
வணிக இணைப்பு வாய்ப்புகள்
இளம் தொழில் முனைவோருக்கு ஆதரவு
புதிய யோசனைகளுடன் முதலிட்டாளர்களுக்கான வாய்ப்புகள்
தொடர்புகளுக்கு
+41 79 591 05 55
www.stedo.ch
+41 79 218 70 75
hello@stedo.ch
இணைவோம்! வளர்வோம்! உலகம் நோக்கி முன்னேறுவோம்!




# 30°C-ஐ தாண்டினால் 6 மணி நேரவேலை: முழு சம்பளம்!

## வெப்ப அலையில் பேசல் நிறுவனம் மனிதநேய முன்னுதாரணம்

சுவிட்சர்லாந்தில் நிலவி வரும் கடும் வெப்ப அலை காரணமாக, பேசல் மாநிலத்தின் Allschwil பகுதியில் செயல்படும் Zweipack என்ற கட்டிட பராமரிப்பு நிறுவனம், ஊழியர்களின் உடல்நலனைப் பாதுகாக்க புதிய நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

நிறுவனத்தின் புதிய விதிமுறையின்படி, வெப்பநிலை 30°C-ஐ தாண்டினால், வழக்கமாக 8.4 மணி நேரம் வேலை செய்யும் ஊழியர்கள் 6 மணி நேரம் மட்டுமே பணியாற்றுவார்கள். இருப்பினும், முழு சம்பளமும் எந்தக் குறைப்புமின்றி வழங்கப்படும்.

வெளிப்புற பணியில் ஈடுபடும் ஊழியர் எரோல் ரமசான், 'இந்த வெப்பத்தில் வேலை செய்ய சக்தியே இல்லை. இப்படிப்பட்ட சூழலில் தொடர்ந்து வேலை செய்வது உடல்நலத்திற்கு நல்லதல்ல' என்று தெரிவித்துள்ளார். நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மிஷா பிளாட்னர், 'பிற்பகல் 2 மணிக்குப் பிறகு அனைவரும் சோர்வடைந்து விடுகின்றனர். இவ்வளவு வெப்பத்தில் தொடர்ந்து வேலை செய்தால், ஊழியர்கள் நோய்வாய்ப்படுவார்கள். அதனால் யாருக்கும் பயன் இல்லை' என்று கூறியுள்ளார்.

நிறுவனம் அதிக வெப்பம் ஏற்படும் நேரத்திற்கு முன்பாக முக்கிய பணிகளை முடிக்க திட்டமிட்டு செயல்படுகிறது. இந்த மாற்றத்தால் நிறுவனத்திற்கு நிதி இழப்பு எதுவும் இல்லை என்றும், ஊழியர்களின் உற்சாகமும் நன்றியுணர்வும் அதிகரித்துள்ளதாகவும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், MeteoSwiss கணிப்பின்படி, இந்த வாரத்தின் தொடக்கத்தில் Basel, Zrich, Gen“ve உள்ளிட்ட பகுதிகளில் 34 முதல் 36ஓஇ வரை வெப்பநிலை பதிவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. திங்கட்கிழமை மாலை இடியுடன் கூடிய மழை பெய்து வெப்பம் குறையக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# சுவிட்சர்லாந்தில் விமான டிக்கெட் கட்டணம் 68% உயர்வு

சுவிட்சர்லாந்தில் விமானப் பயணக் கட்டணங்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் 68 சதவீதம் உயர்ந்துள்ளதாக Comparis Leisure Price Index தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை உயர்வு, பணியாளர் செலவுகள், விமான பராமரிப்பு, புதிய விமானங்கள் வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் குறைந்த லாபம் தரும் வழித்தடங்களில் விமான சேவைகள் குறைக்கப்பட்டமை ஆகியவை இந்த விலை உயர்வுக்கான முக்கிய காரணங்களாகக் கூறப்படுகின்றன.

அதேவேளை, 2026 ஜூன் மாதத்தில், மே மாதத்துடன் ஒப்பிடும்போது விமானக் கட்டணங்கள் 7.3% குறைந்திருந்தாலும், கடந்த ஆண்டு ஜூனுடன் ஒப்பிடுகையில் அவை இன்னும் 3.4% அதிகமாகவே உள்ளன.

மேலும், 2021-ஐ ஒப்பிடும்போது ஹோட்டல் தங்கும் கட்டணங்கள் 13.6% உயர்ந்துள்ளன. ஆனால் முகாமிடும் (Camping) வசதிகள் மற்றும் விடுமுறை வீட்டு வாடகை கட்டணங்கள் 2.8% குறைந்துள்ளன என ஆய்வு தெரிவிக்கிறது.





# சுவிஸ் நடுநிலைமை முன்முயற்சி

## செப்டம்பர் 27 வாக்கெடுப்பில் முக்கிய தீர்மானம்



சுவிட்சர்லாந்தில் வரும் செப்டம்பர் 27 நடைபெறவுள்ள வாக்கெடுப்பில், நாட்டின் நடுநிலைமைக் கொள்கையை மேலும் கடுமையாக்கும் ‘நடுநிலைமை முன்முயற்சி’ (Neutralittsinitiative) முக்கிய விவாதமாகியுள்ளது.

இந்த முன்முயற்சி நிறைவேற்றப்பட்டால், ஐ.நா. பாதுகாப்பு சபை அங்கீகரிக்கும் தடைகளுக்கு (Sanctions) மட்டுமே சுவிட்சர்லாந்து ஆதரவு அளிக்க முடியும். இதனால், ஐரோப்பிய ஒன்றியம் (EU) தனியாக விதிக்கும் தடைகளில் சுவிஸ் இனி பங்கேற்க முடியாது. குறிப்பாக, ரஷ்யாவுக்கு எதிரான தடைகள் நடைமுறையில் சாத்தியமற்றதாக மாறும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், நேட்டோ (NATO) மற்றும் ஐரோப்பிய பாதுகாப்புத் திட்டங்களுடனான தற்போதைய ஒத்துழைப்பும் கட்டுப்படுத்தப்படும்.

இந்த முன்முயற்சி ஐரோப்பாவில் இதுவரை இல்லாத வகையிலான நடுநிலைமைக் கொள்கையை உருவாக்கும் என்றும், இதனால் சுவிட்சர்லாந்து தனிமைப்படும் அபாயம் இருப்பதாக சில நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

அதேவேளை, முன்முயற்சியை ஆதரிப்பவர்கள், ஐ.நா. அங்கீகாரம் இல்லாத பொருளாதாரத் தடைகளில் ஈடுபடாமல் இருப்பதே உண்மையான நடுநிலைமை என்றும், உலகின் பல நாடுகள் இதே அணுகுமுறையையே பின்பற்றுகின்றன என்றும் வலியுறுத்துகின்றனர்.

இந்த முக்கியமான அரசியல் விவகாரம் குறித்து இறுதி முடிவை சுவிஸ் மக்கள் செப்டம்பர் 27 நடைபெறும் தேசிய வாக்கெடுப்பில் எடுக்கவுள்ளனர்



# பாசலில் லெஜியோனெல்லா தொற்று பரவல்; 69 வயது நபர் உயிரிழப்பு: 26 பேர் பாதிப்பு

சுவிட்சர்லாந்தின் பாசல் (Basel) நகரில் கடந்த இரண்டு வாரங்களாக பரவி வரும் லெஜியோனெல்லா (Legionella) பாக்டீரியா தொற்றால் இதுவரை 26 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 69 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார் என பாசல் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் ஏற்கனவே பிற உடல்நலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மொத்தம் 25 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது 9 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் 7 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் (ICU) அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், ஒருவர் உயிரிழந்ததுடன், மற்றொருவர் இன்னும் தீவிர சிகிச்சையில் உள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களில் 20 ஆண்களும், 6 பெண்களும் அடங்குகின்றனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களின் சராசரி வயது 64 ஆகும்.

விசாரணைகளில், Kleinbasel பகுதியில் உள்ள Rebgasse அலுவலகக் கட்டிடத்தின் கூரையில் அமைந்திருந்த இரண்டு Cooling Tower-களில் மனிதர்களுக்கு ஆபத்தான Legionella pneumophila பாக்டீரியா அதிகளவில் கண்டறியப்பட்டது. இதையடுத்து அந்த இரண்டு அமைப்புகளும் உடனடியாக செயலிழக்கச் செய்யப்பட்டு, சீரமைப்பு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

மேலும் ஆய்வு செய்யப்பட்ட 10 Cooling Tower-களில் 8 இடங்களில் லெஜியோனெல்லா பாக்டீரியா கண்டறியப்பட்டாலும், அவற்றில் பெரும்பாலானவை மனிதர்களுக்கு நோய் ஏற்படுத்தாத வகையைச் சேர்ந்தவை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இருப்பினும் அனைத்து இடங்களிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

லெஜியோனெல்லா நோய், பாக்டீரியா கலந்த மிகச் சிறிய நீர்த்துளிகளை சுவாசிப்பதன் மூலம் பரவுகிறது. இது மனிதரிடமிருந்து மனிதருக்கு பரவாது என சுகாதாரத் துறை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

காய்ச்சல், கடுமையான இருமல், மூச்சுத் திணறல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகுமாறும், நோயின் மறைவுக் காலம் (Incubation Period) 2 முதல் 10 நாட்கள் வரை இருப்பதால் ஆகஸ்ட் நடுப்பகுதி வரை புதிய நோயாளிகள் கண்டறியப்பட வாய்ப்புள்ளதாகவும் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.



# தவறுதலாக லிச்சென்ஸ்டைனுக்குள் 3 முறை நுழைந்த சுவிஸ் இராணுவம்!

## வரலாற்றில் இடம்பெற்ற சுவாரஸ்ய சம்பவங்கள்

உலகில் நடுநிலை (Neutrality) கொள்கையைப் பின்பற்றி வரும் நாடுகளில் முக்கியமானது சுவிட்சர்லாந்து. இருப்பினும், கடந்த சில தசாப்தங்களில் அதன் அண்டை நாடான லிச்சென்ஸ்டைனுக்குள் (Liechtenstein) சுவிஸ் இராணுவம் மூன்று முறை தவறுதலாக நுழைந்த சம்பவங்கள் இன்று வரை சுவாரஸ்யமான வரலாற்று நிகழ்வுகளாக பேசப்படுகின்றன.

### 1985 - ஏவுகணை தவறி காட்டுத்தீ

1985 ஆம் ஆண்டு நடைபெற்ற இராணுவப் பயிற்சியின் போது, தரையிலிருந்து வானுக்கு ஏவப்படும் ஏவுகணைகள் தவறுதலாக லிச்சென்ஸ்டைன் எல்லைக்குள் பாய்ந்தன. இதனால் அங்குள்ள காடுகளில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது. ஆரம்பத்தில் பலத்த காற்றே காரணம் என விளக்கம் அளிக்கப்பட்டாலும், பின்னர் ஏற்பட்ட சேதத்திற்காக சுவிட்சர்லாந்து இழப்பீடு வழங்கியது.

### 1992 - தவறான இடத்தில் கண்காணிப்பு முகாம்

1992 ஆம் ஆண்டு நடைபெற்ற இராணுவப் பயிற்சியின்போது, சுவிஸ் வீரர்களுக்கு Triesenberg பகுதியில் கண்காணிப்பு நிலையம் அமைக்க உத்தரவிடப்பட்டது. அவர்கள் பணியைத் தொடங்கிய பின்னரே, அப்பகுதி சுவிட்சர்லாந்தில் அல்ல, லிச்சென்ஸ்டைனில் இருப்பதை அங்குள்ள மக்கள் தெரிவித்தனர். அதன் பின்னரே இந்தத் தவறு அதிகாரிகளுக்குப் புரிந்தது.

### 2007 - 170 வீரர்கள் எல்லை தாண்டினர்

2007 ஆம் ஆண்டு மழை பெய்த இரவில், துப்பாக்கிகளுடன் பயிற்சியில் ஈடுபட்டிருந்த 170 சுவிஸ் இராணுவ வீரர்கள், வழி தவறி ஒரு கிலோமீற்றருக்கும் மேலாக லிச்சென்ஸ்டைன் எல்லைக்குள் நுழைந்தனர். பின்னர், இது சுவிட்சர்லாந்து இல்லை! என்பதை உணர்ந்



ததும் உடனடியாக திரும்பிச் சென்றனர்.

**எல்லை மிகவும் எளிமையானது**

சுவிட்சர்லாந்துக்கும் லிச்சென்ஸ்டைனுக்கும் இடையிலான எல்லை பல இடங்களில் மிகவும் எளிமையாக இருப்பதுடன், இரு நாடுகளிலும் சுவிஸ் பிராங்கே நாணயமாகப் பயன்படுத்தப் படுகிறது. மேலும், மக்கள் ஒரே மாதிரியான ஜெர்மன் வழக்குமொழியைப் பேசுவதாலும், கிராமப்புறங்களின் தோற்றமும் ஒத்ததாக இருப்பதாலும், குறிப்பாக இரவு நேரங்களில் எல்லையைத் தவறாகக் கடப்பது சாத்தியமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

அந்த நேரத்தில் லிச்சென்ஸ்டைன் அரசின் உள்துறைப் பேச்சாளர் மார்கஸ் அம்மான், அவர்கள் தாக்குதல் நடத்த வரவில்லை இப்படிப்பட்ட தவறுகள் டக்கலாம் என்று நகைச்சுவையுடன் கருத்து தெரிவித்திருந்தார்.

இந்த மூன்று சம்பவங்களும் இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை பாதிக்காமல், இன்று வரலாற்றில் இடம்பெற்ற சுவாரஸ்ய நிகழ்வுகளாகவே நினைவுகூரப்படுகின்றன.

# ஆகஸ்ட் 12 ல் அரிய சூரிய கிரகணம்:

## சுவிட்சர்லாந்தில் 91% வரை சூரியன் மறையும்

வரும் ஆகஸ்ட் 12, 2026 அன்று ஐரோப்பாவின் பல பகுதிகளில் அரிய சூரிய கிரகணம் நிகழவுள்ளது. சுவிட்சர்லாந்திலும் இந்த வானியல் நிகழ்வை மக்கள் காண முடியும். அப்போது சந்திரன் சூரியனை 91 சதவீதம் வரை மறைக்கும் என வானியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கிரகணத்தின் உச்சநிலை மாலை 8.17 மணியளவில், சூரிய அஸ்தமனத்திற்கு சற்று முன்பு ஏற்படும். அந்நேரத்தில் வானில் ஒளிரும் மெல்லிய பிறை வடிவில் மட்டுமே சூரியன் காணப்படும்.



இந்த கிரகணம் சுவிட்சர்லாந்தில் பகுதி சூரிய கிரகணமாக மட்டுமே தெரியும். இருப்பினும், சூரிய ஒளி குறிப்பிடத்தக்க அளவில் குறைவதால், அரிய வானியல் காட்சியை மக்கள் அனுபவிக்க முடியும் என வானியல் அறிஞர்கள் கூறுகின்றனர். முழுமையான சூரிய கிரகணத்தை சுவிட்சர்லாந்திலிருந்து காண அடுத்த வாய்ப்பு 2081 செப்டம்பர் 3 ஆம் தேதி மட்டுமே கிடைக்கும் என்பதால், இந்த ஆண்டு நிகழும் கிரகணம் மிகவும் சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

எச்சரிக்கை: சூரிய கிரகணத்தை வெறும் கண்களால் நேரடியாகப் பார்க்கக் கூடாது. அங்கீகரிக்கப் பட்ட சூரியக் கிரகண பாதுகாப்புக் கண்ணாடி (Solar Eclipse Glasses) பயன்படுத்தி மட்டுமே பாதுகாப்பாகக் காண வேண்டும்.



# சுவிட்சர்லாந்தில் 2.1 இலட்சம் சைக்கிள் ஓட்டுநர்கள் ஹெல்மெட்டை தவறாக அணிகின்றனர்

சுவிட்சர்லாந்தில் சைக்கிள் ஓட்டுபவர்களில் கணிசமானோர் பாதுகாப்பு ஹெல்மெட்டை சரியான முறையில் அணியாமல் பயணிப்பதாக விபத்து தடுப்பு மையமான (BFU) வெளியிட்டுள்ள ஆய்வு தெரிவிக்கிறது.

2021 முதல் 2025 வரையிலான ஆய்வின் அடிப்படையில், நாட்டில் சைக்கிள் ஓட்டுபவர்களில் 60 சதவீதம் பேர் மட்டுமே ஹெல்மெட் அணிகின்றனர். ஆனால், அவர்களில் 53 சதவீதம் பேர் மட்டுமே ஹெல்மெட்டை சரியான முறையில் பயன்படுத்துகின்றனர். ஒரு சதவீதம் பேர் ஹெல்மெட்டை உடன் எடுத்துச் சென்றாலும் அணியவில்லை. மேலும் சிலர் தாடைப் பட்டையை பூட்டாமல் அல்லது தவறான முறையில் அணிந்திருந்ததாகவும் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்தில் சுமார் 30 இலட்சம் பேர் அவ்வப்போது சைக்கிள் பயன்படுத்துகின்றனர். இதன் அடிப்படையில் கணக்கிடுகையில், சுமார் 2 இலட்சத்து 10 ஆயிரம் பேர் (210,000) போதிய பாதுகாப்பின்றி சைக்கிள் ஓட்டுவதாகவும், அதோடு 12 இலட்சம் பேர் எந்த ஹெல்மெட்டும் அணியாமல் பயணிப்பதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

BFU-வின் பேச்சாளர் கிரிஸ்டோப் லெய்புண்ட்குட் கூறுகையில், சரியாக பொருந்திய ஹெல்மெட் அணிவது கடுமையான தலைக் காயங்களின் அபாயத்தை 70 சதவீதம் வரை குறைக்கக்கூடும் என்றார்.

ஹெல்மெட் வாங்கும்போது அது தலையில் உறுதியாக பொருந்துகிறதா என்பதைச் சோதிக்க வேண்டும் என்றும், சுவிட்சர்லாந்தில் விற்பனை செய்யப்படும் ஹெல்மெட்கள் உமீ 1078 பாதுகாப்புத் தரநிலைக்கு உட்பட்டவையாக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், விபத்தில் தாக்கம் ஏற்பட்ட ஹெல்மெட்டை வெளிப்படையான சேதம் தெரியாவிட்டாலும் மீண்டும் பயன்படுத்தக் கூடாது என்றும், பழைய (Second-hand) ஹெல்மெட்களை வாங்குவதிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் BFU அறிவுறுத்தியுள்ளது.

பாதுகாப்பு நிபுணர்களின் கருத்துப்படி, ஹெல்மெட் அணிவது மட்டுமல்ல, அதை சரியான முறையில் அணிவதே உயிரைக் காக்கும் முக்கிய பாதுகாப்பாகும்.



# தேசப்பற்று என்பது பொறுப்புணர்வு

## சூரிச்சில் தேசிய தின உரையில் வலியுறுத்திய சுவிஸ் இராணுவத் தளபதி

சுவிட்சராந்தின் தேசிய தினத்தை முன்னிட்டு சூரிச்சில் நடைபெற்ற கூட்டாட்சி விழாவில் உரையாற்றிய சுவிஸ் இராணுவத் தளபதி பெனடிக்ட் ரூஸ் (Benedikt Roos), 'தேசப்பற்று என்பது மற்ற நாடுகளை விட சுவிட்சராந்து உயர்ந்தது என்று கருதுவதல்ல; தாய்நாட்டின் மீது பொறுப்புணர்வுடன் செயல்படுவதே உண்மையான தேசப்பற்று' என்று வலியுறுத்தினார்.

சூரிச் ஏரிக்கரையோரத்தில் நடைபெற்ற நிகழ்வில் சுமார் 1,500 பேர் முன்னிலையில் பேசிய அவர், சில சமயங்களில் தமது தேசப்பற்றை வெளிப்படுத்துவதற்கே மன்னிப்பு கேட்க வேண்டிய நிலை இருப்பதாக உணர்வதாகக் குறிப்பிட்டார். இருப்பினும், தாய்நாட்டை நேசிப்பதற்காக யாரும் மன்னிப்பு கேட்க வேண்டியதில்லை; மாறாக அதைப் பெருமையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

சுவிட்சராந்து முழுமையான நாடு அல்ல என்றும், அது ஒருபோதும் அப்படியிருந்ததில்லை என்றும் அவர் கூறினார். கருத்து வேறுபாடுகள், விவாதங்கள், வாக்கெடுப்புகள் ஆகியவை சுவிஸ் ஜனநாயகத்தின் இயல்பான அம்சங்கள் என அவர் சுட்டிக்காட்டினார். வெளிநாடுகளில் சிறிய விடயங்களுக்குக் கூட மக்கள் வாக்களிப்பது ஆச்சரியமாகக் கருதப்படலாம்; ஆனால் அதுவே சுவிட்சராந்தின் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகச் சூழல் வேகமாக மாறிவருவதாகக் குறிப்பிட்ட ரூஸ், சைபர் தாக்குதல்கள், தவறான தகவல் பரப்பல் மற்றும் உளவு நடவடிக்கைகள் போன்ற புதிய அச்சுறுத்தல்களை சுவிட்சராந்து தினமும் எதிர்கொண்டு வருவதாக எச்சரித்தார்.

இத்தகைய சூழலில் சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி போன்ற அடிப்படை மதிப்புகளைப் பாதுகாப்பது இராணுவத்தின் கடமையோடு மட்டுமல்ல; ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பும் ஆகும் என்றார்.

உரையின் இறுதியில், நிகழ்ச்சிக்கு நேரடியாக விடுமுறையிலிருந்து வந்திருந்த அவர், சூழலை இலகுவாக்கும் வகையில் ஒரு நகைச்சுவையையும் பகிர்ந்தார். 'பேர்ன் பகுதியைச் சேர்ந்தவர்கள் சிறந்த வீரர்கள்; போர்க்களத்தில் ஒருவர் உயிரிழந்தாலும், அது தெரியும் வரை இன்னும் இரண்டு நாட்கள் போராடிக் கொண்டிருப்பார்' என்று கூறி, நிகழ்வில் கலந்து கொண்டவர்களை சிரிப்பில் ஆழ்த்தினார்.




# சுவிட்சர்லாந்தில் நோயுற்ற மாடுகளின் மர்மம் தீர்ந்தது

## புதிய Orthobunya virus வைரஸை விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

சுவிட்சர்லாந்தில் அண்மையில் பல பால் மாடுகளைப் பாதித்த மர்ம நோய்க்கான காரணம் கண்டறியப்பட்டுள்ளது. நோயுற்ற மாடுகளிடமிருந்து பெறப்பட்ட மாதிரிகளை ஆய்வு செய்த சுவிட்சர்லாந்தின் வைராலஜி மற்றும் நோய் எதிர்ப்பியல் நிறுவனம் (IVI), Simbu- Serogruppe குழுவைச் சேர்ந்த புதிய Orthobunyavirus வைரஸைக் கண்டுபிடித்துள்ளது.

IVI வெளியிட்ட தகவலின்படி, இது சுவிட்சர்லாந்தின் விலங்கு தொற்று நோய் சட்டத்தின் கீழ் கட்டுப்படுத்தப்படும் ஆபத்தான தொற்று நோயாக கருதப்படவில்லை. மேலும், தற்போது கிடைத்துள்ள அறிவியல் தகவல்களின் அடிப்படையில், இந்த வைரஸ் மனிதர்களுக்கு குறிப்பிடத்தக்க தொற்று அபாயத்தை ஏற்படுத்தாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் Gnitzen எனப்படும் மிகச் சிறிய இரத்தம் உறியும் பூச்சிகளின் மூலம் பரவுகிறது. தற்போது நிலவும் கடுமையான வெப்ப அலை இந்த நோய் பரவலுடன் தொடர்புடையதா என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. பாதிக்கப்பட்ட பண்ணைகளில் நோய் தாக்கம் பொதுவாக 14 முதல் 21 நாட்கள் வரை நீடித்துள்ளது. முக்கிய அறிகுறிகளாக 40ஓஇ-க்கு மேற்பட்ட காய்ச்சல், பால் உற்பத்தி திடீர் குறைவு, தீவனம் உண்ணாமை மற்றும் வயிற்றுப்போக்கு ஆகியவை பதிவாகியுள்ளன.

இந்த புதிய வைரஸ், 2012 ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்தில் கண்டறியப்பட்ட Schmallenberg வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்தது. அப்போது அந்த வைரஸ் கன்றுகள், ஆட்டுக் குட்டிகள் மற்றும் வெள்ளாட்டுக் குட்டிகளில் பிறவிக்குறைபாடுகளை ஏற்படுத்தியிருந்தது.

சுவிட்சர்லாந்தில் கண்டறியப்பட்ட இந்த நிலைமை, ஜெர்மனி மற்றும் பிரான்சில் பதிவான சம்பவங்களுடனும் ஒத்துப்போகிறது. எனவே, மாடுகளில் வழக்கத்திற்கு மாறான நோய் அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக கால்நடை மருத்துவரை தொடர்புகொள்ளுமாறு ஐஙஜ கால்நடை வளர்ப்போருக்கு அறிவுறுத்தியுள்ளது.

# ஆப்கான் பெண்களுக்காக உயிரைத் தியாகம் செய்த சுஷ்மிதா பானர்ஜி



ஐங்கரன் விக்கினேஸ்வரா

## அச்சத்தை மீறிய இந்திய பெண்!

போர், மத அடிப்படைவாதம், பெண்களின் உரிமை மறுப்பு, மனித உரிமை மீறல்கள் ஆகியவை ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்திருக்கும் நாடுகளில் ஆப்கானிஸ்தான் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. அந்த நாட்டின் சமீபத்திய வரலாற்றைப் புரிந்துகொள்ள விரும்புபவர்கள், அரசியல் தலைவர்களின் வாழ்க்கையை மட்டுமல்லாமல், அங்கு வாழ்ந்த சாதாரண மக்களின் அனுபவங்களையும் அறிந்திருக்க வேண்டும். அவ்வாறான மனிதக் கதைகளில் உலகின் கவனத்தை ஈர்த்த மிக முக்கியமான பெயர்களில் ஒன்று சுஷ்மிதா பானர்ஜி.

அவர் ஒரு அரசியல்வாதி அல்ல. ஆயுதம் ஏந்திய போராளியும் அல்ல. ஆனால், ஒரு சாதாரண இந்தியப் பெண்ணாக ஆப்கானிஸ்தானுக்குச் சென்று, தாலிபானின் கொடூர ஆட்சியை நேரடியாக அனுபவித்து, பின்னர் அந்த உண்மைகளை உலகிற்கு வெளிப்படுத்திய எழுத்தாளராகவும், ஆப்கான் பெண்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்த மனித உரிமைச் செயற்பாட்டாளராகவும் வரலாற்றில் இடம்பிடித்தார்.

அவரது வாழ்க்கை காதலால் தொடங்கி, கொடுமையால் சிதறி, எழுத்தின் மூலம் எதிர்ப்பாக மாறி, இறுதியில் உயிர்த் தியாகத்தில் முடிந்தது. அதனால்தான் சுஷ்மிதா பானர்ஜியின் வாழ்க்கை ஒரு தனிப்பட்ட சோகக் கதையாக மட்டுமல்ல; ஒடுக்கப்பட்ட பெண்களின் எதிர்ப்பின் வரலாறாகவும் பார்க்கப்படுகிறது.

### ஆப்கானில் ஓர் காதல் :

சுஷ்மிதா பானர்ஜி இந்தியாவின் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர். இளமைக் காலத்தில் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ஜான்பாஸ் கான் என்ற தொழிலதிபரை காதலித்து 1988 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். குடும்பத்தின் எதிர்ப்பு

களையும் சமூகக் கட்டுப்பாடுகளையும் மீறி நடைபெற்ற இந்தத் திருமணம், அவருடைய வாழ்க்கையின் மிகப் பெரிய திருப்புமுனையாக அமைந்தது.

திருமணத்திற்குப் பிறகு அவர் தனது கணவருடன் ஆப்கானிஸ்தானின் பக்திகா மாகாணத்தில் குடியேறினார். அப்போது சோவியத் படைகள் வெளியேறிய பின்னர் நாடு அரசியல் குழப்பத்தில் இருந்தாலும், பல கிராமப்புறங்களில் மக்களின் அன்றாட வாழ்க்கை தொடர்ந்து கொண்டிருந்தது. புதிய நாட்டில் புதிய குடும்பத்துடன் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற கனவோடு அவர் வாழத் தொடங்கினார். ஆனால் அந்த அமைதி நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை.

### தாலிபான் எழுச்சி - மகளிர் இருண்ட காலம்:

1990-களின் நடுப்பகுதியில் தாலிபான் அமைப்பு வேகமாக வளர்ந்து, 1996 ஆம் ஆண்டு காபூலை கைப்பற்றி ஆட்சியை நிறுவியது. அதன்பிறகு ஆப்கானிஸ்தானின் அரசியல் மட்டுமல்ல, சமூக வாழ்க்கையும் முற்றிலுமாக மாறியது. பெண்கள் பள்ளிக்குச் செல்லக்கூடாது, வேலை செய்யக்கூடாது, ஆண் உறவினர் இல்லாமல் வெளியே வரக்கூடாது, இசை கேட்கக்கூடாது, சிரித்துப் பேசக்கூடாது என வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் கட்டுப்படுத்தும் சட்டங்கள் நடைமுறைக்கு வந்தன. புர்கா அணிவது கட்டாயமாக்கப்பட்டது. சிறிய விதிமுறைகளை மீறினாலும் பொதுமக்கள் முன்னிலையில் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன.

இந்த மாற்றங்கள் சுஷ்மிதாவின் வாழ்க்கையையும் நேரடியாகப் பாதித்தன. இந்தியாவில் சுதந்திரமாக வாழ்ந்த அவர், திடீரென உரிமையற்ற வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டார். ஒரு பெண்ணாக மட்டுமல்ல, வெளிநாட்டவராகவும் அவர் கூடுதல் சந்தேகத்துடன் பார்க்கப்பட்டார். தாலிபான் ஆட்சியின் அடக்குமுறைகள் நாளுக்கு நாள் தீவிரமடைந்தபோது, அங்கிருந்து தப்பிச் செல்ல வேண்டும் என்ற முடிவை சுஷ்மிதா எடுத்தார். தனது நினைவுக் குறிப்புகளின்படி, 1995 ஆம் ஆண்டு அவர் தப்பிச் செல்ல முயன்றபோது தாலிபான் போராளிகளால் கைது செய்யப்பட்டார்.

அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதாகவும், தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு ஒரு



கிராமத் தலைவரின் உதவியுடன் தப்பியதாகவும் அவர் பின்னர் எழுதியுள்ளார். இந்த நிகழ்வு அவரது வாழ்க்கையில் மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது. இந்தச் சம்பவத்தின் சில விவரங்கள் குறித்து பின்னர் ஆய்வாளர்கள் கேள்விகளை எழுப்பியிருந்தாலும், தாலிபான் ஆட்சியின் கீழ் பெண்கள் எதிர்கொண்ட அடக்குமுறைகள் குறித்து அவர் பதிவு செய்துள்ள மையக் கருத்துகள் பல சர்வதேச மனித உரிமை அறிக்கைகளாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

### எழுத்தின் மூலம் உலகை அதிரவைத்தவர்:

பின்னர் இந்தியாவிற்குத் திரும்பிய பிறகு, சுஷ்மிதா தனது அனுபவங்களை மௌனமாக வைத்திருக்கவில்லை. அவற்றை எழுத்தாக்கி Kabuliwalar Bangali Bou (காபுலிவாலாரின் பெங்காலி மனைவி) என்ற நினைவுக் குறிப்பை வெளியிட்டார். இந்த நூல் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பெரும் வரவேற்பைப் பெற்றது. ஏனெனில் அது வெறும் அரசியல் விமர்சனம் அல்ல; தாலிபான் ஆட்சியின் கீழ் வாழ்ந்த ஒரு பெண்ணின் நேரடி அனுபவமாக இருந்தது.

பெண்கள் எப்படி ஒடுக்கப்பட்டார்கள், அன்றாட வாழ்க்கை எவ்வாறு அச்சத்தால் நிரம்பியிருந்தது, மத அடிப்படைவாதம் மனித வாழ்க்கையை எவ்வாறு சீரழித்தது என்பதை அவர் மிகத் தெளிவாக பதிவு செய்திருந்தார்.

பின்னர் அவரது வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு Escape from Taliban என்ற இந்தித் திரைப்படம் உருவாக்கப்பட்டது. இந்த திரைப்படம் அவரது வாழ்க்கைக் கதையை கோடிக்கணக்கான மக்களிடம் கொண்டு சென்றது.

### மீண்டும் ஆப்கானிஸ்தானுக்குத் திரும்பிய துணிச்சல்

ஒருமுறை மரணத்தின் வாயிலிலிருந்து தப்பிய ஒருவர் மீண்டும் அதே நாட்டிற்குச் செல்வது சாதாரண முடிவு அல்ல. ஆனால் சுஷ்மிதா அப்படிச் செய்தார். 2001 ஆம் ஆண்டு அமெரிக்க தலைமையிலான படையெடுப்புக்குப் பிறகு தாலிபான் முதல் ஆட்சி வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து, 2003 ஆம் ஆண்டு அவர் மீண்டும் ஆப் கானிஸ்தானுக்குத் திரும்பினார்.


அவரது நோக்கம் பழைய வாழ்க்கையை மீட்டெடுப்பது மட்டுமல்ல. போர் முடிந்த பிறகும் பெண்களின் வாழ்க்கை எவ்வாறு தொடர்கிறது என்பதை உலகிற்கு எடுத் துரைப்பது. ஆவணப்படங்கள் தயாரிப் பதிலும், பெண்களின் வாழ்க்கையைப் பதிவு செய்வதிலும், உள்ளூர் சமூகங்க ளுடன் இணைந்து பணியாற்றுவதிலும் அவர் ஈடுபட்டார்.

பல ஆப்கான் பெண்கள் இன்னும் வறு மை, கல்வியறிவு பற்றாக்குறை, குடும்ப வன்முறை மற்றும் பழமைவாத சமூகக் கட்டுப்பாடுகளின் கீழ் வாழ்ந்து கொண்டி ருந்தனர். இந்த உண்மைகளை வெளிச் சத்திற்கு கொண்டு வர வேண்டும் என்பதே அவரது இலக்காக இருந்தது.

### பெண்களின் குரலாக மாறிய எழுத்தாளர்

சுஷ்மிதா பானர்ஜி வெறும் எழுத்தாள ராக மட்டுமல்லாமல், ஆப்கான் பெண்க ளின் குரலாக மாறினார். அவரது எழுத் துகள் உலகிற்கு ஒரு முக்கியமான உண் மையை எடுத்துக்காட்டின. போர் என்பது வெறும் இராணுவங்களுக்கு இடையே யான மோதல் அல்ல; அதன் மிகப்பெரிய பாதிப்பை பெண்களும் குழந்தைகளும் தான் அனுபவிக்கிறார்கள்.

ஒரு பெண் கல்வி கற்க முடியாமல் போவது, மருத்துவ சேவையைப் பெற முடியாமல் போவது, தனது விருப்பப்படி வாழ முடியாமல் போவது, சுதந்திரமாகச் சிரிக்கக்கூட முடியாத நிலை ஏற்படுவது போன்றவை அனைத்தும் மனித உரிமை மீறல்களே என்பதை அவரது வாழ்க்கை உலகிற்கு உணர்த்தியது.





### 2013 - மீண்டும் வன்முறை அவரைத் தேடியது

2013 செப்டம்பர் 4 ஆம் தேதி அதி காலை, பக்திகா மாகாணத்தில் இருந்த அவரது வீட்டிற்குள் ஆயுதம் ஏந்திய நபர் கள் நுழைந்தனர். அவரது கணவர் கட்டிப் போடப்பட்டார். சுஷ்மிதா கடத்திச் செல்லப் பட்டார். சில மணி நேரங்களுக்குப் பிறகு அவரது உடல் சாலையோரத்தில் மீட்கப்பட் டது. பல துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அவர் கொல்லப்பட்டிருந்தார்.

இந்தக் கொலையின் பின்னணியில் யார் இருந்தார்கள் என்பது இன்று வரை முழுமையாகத் தெளிவாகவில்லை. ஆப் கான் அதிகாரிகள் தாலிபான் தொடர்பு டையவர்களைச் சந்தேகித்தனர். ஆனால் தாலிபான் அந்தக் குற்றச்சாட்டை மறுத் தது. எவ்வாறாயினும், மனித உரிமை களுக்காகப் பணியாற்றியவர்களின் பாதுகாப்பு குறித்து அவரது மரணம் உலகளாவிய விவாதத்தை மீண்டும் எழுப்பியது.

சுஷ்மிதாவின் நினைவுக் குறிப்புகளில் இடம்பெற்ற சில சம்பவங்கள் குறித்து பின்னர் சில பத்திரிகையாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் கேள்விகளை எழுப்பினர். குறிப்பாக அவர் தப்பித்த விதம், மரண தண்டனை சம்பவம் போன்றவற்றின் வர லாற்றுத் துல்லியம் குறித்து விவாதங்கள் நடைபெற்றன.

ஆனால் இந்த விவாதங்கள் அவரது வாழ்க்கையின் மையச் செய்தியை மாற்ற




வில்லை. தாலிபான் ஆட்சியின் கீழ் பெண்கள் கல்வி, வேலை, சுகாதாரம், சுதந்திரமான நடமாட்டம் போன்ற அடிப்படை உரிமைகளையே இழந்திருந்தனர் என்பது ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட பல சர்வதேச அமைப்புகளின் அறிக்கைகளாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

### சுஷ்மிதா பானர்ஜி
### விட்டுச் சென்ற மரபு

சுஷ்மிதா பானர்ஜியின் வாழ்க்கை ஒரு முக்கியமான பாடத்தை நமக்கு கற்பிக்கிறது. உண்மையைச் சொல்லுவது சில நேரங்களில் உயிரைப் பணயம் வைக்கும் செயலாக இருக்கலாம். ஆனால் அந்த உண்மை உலகை மாற்றும் சக்தியைக் கொண்டிருக்கிறது. அவர் எழுதிய நூல்கள் இன்று வரலாற்று ஆவணங்களாக வாசிக்கப்படுகின்றன. ஆப்கானிஸ்தானில் பெண்கள் எதிர்கொண்ட அநீதிகளைப் புரிந்துகொள்ள விரும்பும் பல ஆய்வாளர்களுக்கும் மாணவர்களுக்கும் அவரது அனுபவங்கள் ஒரு முக்கியமான சான்றாக உள்ளன.

சுஷ்மிதா பானர்ஜியின் வாழ்க்கை காதல், துணிச்சல், தியாகம், மனித உரிமைப் போராட்டம் மற்றும் சோகமான மரணம் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய அரிய வாழ்க்கைப் பயணமாகும். அவர் பாதுகாப்பான வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். இந்தியாவில் அமைதியாக வாழ்ந்திருக்கலாம். ஆனால் ஆப்கான் பெண்களின் குரல் உலகிற்கு சென்றடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக மீண்டும் ஆப்கானிஸ்தானுக்குச் சென்றார். அந்த முடிவு இறுதியில் அவரது உயிரைப் பறித்தாலும், அவரது குரலை மௌனமாக்க முடியவில்லை.

இன்றும் சுஷ்மிதா பானர்ஜி ஒரு எழுத்தாளராக மட்டுமல்ல, அநீதிக்கு எதிராக அச்சமின்றி குரல் கொடுத்த பெண்ணாக நினைவுகூரப்படுகிறார். மனித உரிமைகள் என்பது அரசியல் கோஷமல்ல; ஒவ்வொரு மனிதனும், குறிப்பாக ஒவ்வொரு பெண்ணும், அச்சமின்றி, மரியாதையுடன், சுதந்திரமாக வாழ வேண்டிய அடிப்படை உரிமை என்பதை அவரது வாழ்க்கை நமக்கு நினைவூட்டுகிறது.

அவரது கதை ஒரு பெண்ணின் வாழ்க்கை வரலாறு மட்டுமல்ல ஒடுக்குமுறைக்கு எதிராக எழுந்த மனித மன உறுதியின் அழியாத சாட்சியாகவும், உலகம் மறக்கக் கூடாத ஒரு வரலாற்றுப் பதிவாகவும் என்றும் நிலைத்திருக்கும்.





# வெப்பத்தால் சூரிச்சில் அதிகரிக்கும் சிறுநீர் துர்நாற்றம்

## Street Parade க்கு முன்பே நகரம் பாதிப்பு

கடும் வெப்பநிலை மற்றும் பொது இடங்களில் சிறுநீர் கழிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால், சூரிச் நகரின் பல பகுதிகளில் துர்நாற்றப் பிரச்சினை தீவிரமடைந்துள்ளது. குறிப்பாக ஸ்டாடெல் ஹோஃபென் (Stadelhofen) மற்றும் சூரிச் ஏரிக்கரை (Seebecken) பகுதிகளில் நிலைமை மோசமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெப்பம் அதிகரிப்பதால், சாலைகள் மற்றும் சுவர்களில் உலர்ந்த சிறுநீரிலிருந்து அமோனியா வாயு வேகமாக வெளியேறி, கடுமையான துர்நாற்றம் உருவாகிறது என்று நிபுணர்கள் விளக்குகின்றனர்.

சூரிச் நகராட்சி இந்தப் பிரச்சினையை கட்டுப்படுத்த 100-க்கும் மேற்பட்ட பொதுக் கழிப்பறைகளை இயக்கி வருகிறது. Street Parade நிகழ்வை முன்னிட்டு கூடுதல் தற்காலிக கழிப்பறைகளும் அமைக்கப்படவுள்ளன. பொதுமக்கள் திறந்த வெளியில் சிறுநீர் கழிப்பதைத் தவிர்க்குமாறும், மீறுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுமாறும் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இதற்கிடையில், ETH – யின் நீர்வள ஆராய்ச்சி நிறுவனம் உச்தீச்ஞ்-இன் ஆய்வாளர்கள், மனித சிறுநீரில் உள்ள நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற ஊட்டச்சத்துகளை மீட்டெடுத்து விவசாய உரமாகப் பயன்படுத்த முடியும் என தெரிவித்துள்ளனர். தற்போது துர்நாற்றமாகக் கருதப்படும் இந்தக் கழிவுப்பொருள், எதிர்காலத்தில் மதிப்புமிக்க இயற்கை வளமாக பயன்படக்கூடும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# சுவிட்சர்லாந்தில் விரைவில் 'ரோபோ டாக்ஸி' சேவை?

## Waymo நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை

ஓட்டுநர் இல்லாமல் தானாக இயங்கும் Waymo நிறுவனத்தின் Robotaxi சேவையை சுவிட்சர்லாந்தில் அறிமுகப் படுத்தும் முயற்சிகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

SVP தேசிய சபை உறுப்பினர் பிரான்ஸ் க்ரூட்டர் (Franz Grter), அமெரிக்காவில் வெற்றிகரமாக இயங்கி வரும் ஙிச்தூட்ணி நிறுவனத் தின் தானியங்கி டாக்ஸிகளை சுவிட் சர்லாந்திற்குக் கொண்டு வர ஆதரவு தெரிவித்து வருகிறார்.

வட அமெரிக்க பயணத்தின் போது, சுவிஸ் கூட்டாட்சி தலைவர் கை பார் மலின் (Guy Parmelin) Waymo தானியங்கி வாகனத்தில் பயணம் செய் ததையடுத்து, 'இந்த தொழில்நுட்பம் என்னை மிகவும் கவர்ந்தது. இது ஆத ரிக்கப்பட வேண்டிய ஒரு நல்ல முயற்சி' என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், சுவிஸ் போக்குவரத்து அமைச்சர் அல்பர்ட் ரோஸ்டி (Albert R5sti) தானியங்கி வாகனங்களுக்கு திறந்த மனப்பான்மையுடன் இருப்ப தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

Waymo நிறுவனம் தற்போது அமெ ரிக்காவின் பல நகரங்களில் சேவை யாற்றி வருகிறது. விரைவில் லண்டன் மற்றும் டோக்கியோ நகரங்களிலும் சே வையை தொடங்க திட்டமிட்டுள்ளது. சுவிட்சர்லாந்திலும் சேவையை அறிமு கப்படுத்துவது குறித்து ஆர்வத்துடன் பரிசீலித்து வருவதாக தகவல்கள் தெரி விக்கின்றன.

சுவிட்சர்லாந்தின் சாலைப் போக்கு வரத்து அலுவலகம் (ASTRA), பாது காப்புக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் தானியங்கி வாகன தொழில் நுட்பத்தை வரவேற்பதாக தெரிவித் துள்ளது.






# 143 ஆண்டுகள் பழமையான சூரிச் அரசின் அரிய ஆவணம்!

சுவிட்சர்லாந்தின் Zrich கான்டனில் 1883 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட ஒரு அரிய அதிகாரப்பூர்வ ஆவணம் சமூக ஊடகங்களில் தற்போது கவனத்தை ஈர்த்துள்ளது. இது Heimatschein fr Unverheiratete எனப்படும், திருமணம் ஆகாத நபருக்கான சொந்த ஊர் (Heimatort) சான்றிதழ் ஆகும்.

இந்த ஆவணம் Konrad Meyer என்ற நபருக்கு 1883 ஏப்ரல் 19 அன்று வழங்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் சுவிட்சர்லாந்தில், ஒருவர் எந்த நகரம் அல்லது கம்யூனின் சட்டபூர்வ குடிமகன் என்பதை உறுதிப்படுத்தும் முக்கிய ஆவணமாக இது பயன்படுத்தப்பட்டது.

வேலை, கல்வி, குடியேற்றம், திருமணம் மற்றும் அரசுப் பதிவுகள் போன்ற பல நிர்வாக நடவடிக்கைகளில் இந்தச் சான்றிதழ் அவசியமான ஒன்றாக இருந்தது. இதில் Zrich நகரம் மற்றும் Zrich கான்டன் அரசின் அதிகாரப்பூர்வ முத்திரைகள் மற்றும் கையொப்பங்களும் இடம்பெற்றுள்ளன.

இன்று இவ்வகையான ஆவணங்கள் சுவிட்சர்லாந்தின் நிர்வாக வரலாறு, குடியுரிமை முறை மற்றும் குடும்ப வரலாற்று ஆய்வுகளுக்கான அரிய வரலாற்றுச் சான்றுகளாகப் பாதுகாக்கப்படுகின்றன.

குறிப்பு: இந்தக் கட்டுரை சமூக ஊடகத்தில் பகிரப்பட்ட ஒரு பழமையான ஆவணத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட விளக்கக் கட்டுரையாகும்; ஆவணத்தின் மூலமும் அதன் முழு வரலாறும் தனியாக உறுதிப்படுத்தப்படவில்லை.



# மத்திய ஆப்பிரிக்கக் குடியரசில் தாக்குதல்
# சுவிஸ் பிரஜை மற்றும் இராணுவ வீரர் உயிரிழப்பு

மத்திய ஆப்பிரிக்கக் குடியரசின் தலைநகர் பாங்கி (Bangui) க்கு வடக்கே அமைந்துள்ள டமாரா (Damara) நகருக்கு அருகில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆயுதத் தாக்குதலில், ஒரு சுவிஸ் பிரஜையும் மத்திய ஆப்பிரிக்க இராணுவத்தைச் சேர்ந்த ஒரு வீரரும் உயிரிழந்துள்ளனர்.

இராணுவ அதிகாரிகள் வழங்கிய தகவலின்படி, தாக்குதலை இதுவரை அடையாளம் காணப்படாத ஆயுதம் ஏந்திய குழுவொன்று மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த சுவிஸ் பிரஜை, அந்நாட்டில் தங்கம், வைரம் உள்ளிட்ட கனிம வளங்கள் தொடர்பான ஆய்வு (Mineral Exploration) பணிக்காக சென்றிருந்தார். அவருடன் பாதுகாப்பு பணியில் சென்றிருந்த இராணுவ உப அதிகாரியும் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக மத்திய ஆப்பிரிக்க அதிகாரிகள் நீதித்துறை விசாரணையை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர். குற்றவாளிகளை அடையாளம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உயிரிழப்பை சுவிட்சர்லாந்தின் வெளிவிவகார அமைச்சகம் (EDA) உறுதிப்படுத்தியுள்ளது. பாங்கியில் உள்ள சுவிஸ் ஒத்துழைப்பு அலுவலகமும், கமரூன் தலைநகர் யாவுண்டேயில் உள்ள சுவிஸ் தூதரகமும் உள்ளூர் அதிகாரிகளுடன் இணைந்து, உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு தேவையான தூதரக உதவிகளை வழங்கி வருகின்றன.

மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, வைரம் மற்றும் தங்கம் போன்ற இயற்கை வளங்கள் நிறைந்த நாடாக இருந்தாலும், கடந்த உள்நாட்டுப் போரின் விளைவுகளால் பாதுகாப்பு நிலைமை இன்னும் முழுமையாக சீராகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# ஐரோப்பா முழுவதும் வேகக்கட்டுப்பாட்டு தீவிர சோதனை

## ஆகஸ்ட் 9 வரை ROADPOL நடவடிக்கை

## சுவிட்சர்லாந்து ஓட்டுநர்களுக்கு முக்கிய எச்சரிக்கை

ஐரோப்பிய போக்குவரத்து காவல்துறை அமைப்பான ROADPOL ஒருங்கிணைப்பில், ஆகஸ்ட் 3 முதல் 9 ஆம் தேதி வரை ஐரோப்பா முழுவதும் "Operation Speed" என்ற பெயரில் சிறப்பு வேகக்கட்டுப்பாட்டு சோதனை முன்னெடுக்கப்படுகிறது.

கோடை விடுமுறை பயணங்கள் அதிகரித்துள்ள நிலையில், ஜெர்மனி, நெதர்லாந்து உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகளில் கூடுதல் போக்குவரத்து காவல்துறையினரும், தற்காலிக மற்றும் நிரந்தர வேகக் கண்காணிப்பு (Speed Camera) கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

சோதனைகள் பெரும்பாலும் விபத்துகள் அதிகம் நடைபெறும் பகுதிகள், பாடசாலைகள், மருத்துவமனைகள், குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் சாலைப் பணிகள் நடைபெறும் இடங்களை மையமாகக் கொண்டு நடத்தப்படுகின்றன.

வேக வரம்பை மீறும் ஓட்டுநர்களுக்கு அபராதம், கடுமையான சந்தர்ப்பங்களில் ஓட்டுநர் உரிமம் (Driving Licence) பறிமுதல் செய்யப்படவும் வாய்ப்புள்ளது. கோடை விடுமுறையை முடித்து சுவிட்சர்லாந்து திரும்பும் ஓட்டுநர்கள் மற்றும் எல்லைப் பகுதிகளுக்கு வாகனங்களில் செல்லும் அனைவரும் வேக வரம்புகளையும் போக்குவரத்து விதிகளையும் கண்டிப்பாகப் பின்பற்றுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

### Operation Speed என்றால் என்ன?

கீஙிஅஈகஙிஃ ஆண்டுதோறும் நடத்தும் இந்த ஒரு வார பாதுகாப்பு நடவடிக்கையின் நோக்கம், அதிக வேகத்தால் ஏற்படும் சாலை விபத்துகளையும் உயிரிழப்புகளையும் குறைப்பதே ஆகும்.

முந்தைய ஆண்டுகளில் இந்த நடவடிக்கையின் போது சாலை உயிரிழப்புகள் சுமார் 25% வரை குறைந்ததாக தெரிவிக்கப்பட்டாலும், சோதனை முடிந்ததும் ஓட்டுநர்கள் மீண்டும் பழைய வேகத்திற்கு திரும்புவதால், அதன் நீண்டகால பலன் குறித்து சில நிபுணர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# சுவிட்சர்லாந்தில் அடைக்கலக் கொள்கையில் கடுமையான மாற்றம் கோரும் FDP இளைஞர் அமைப்பு

## நாடு தற்போது அடைக்கல நெருக்கடியை எதிர்கொள்கிறது என எச்சரிக்கை



சுவிட்சலாந்து தற்போது 'அடைக்கல (Asyl) நெருக்கடி' நிலையை எதிர்கொண்டு வருவதாகக் கூறியுள்ள Jungfreisinnige Schweiz (FDP இளைஞர் அமைப்பு), நாட்டின் அகதிகள் தொடர்பான சட்டங்களில் அடிப்படையான மற்றும் கடுமையான சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

### இளம் லிபரல் அமைப்பு முன்வைத்துள்ள முக்கிய கோரிக்கைகள்:

பாதுகாப்பான நாடுகளிலிருந்து வரும் அடைக்கலக் கோரிக்கைகளை விரைவாக நிராகரித்தல்.

அடைக்கல முறையை தவறாக பயன்படுத்துவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை.

குற்றங்களில் ஈடுபடும் அல்லது சட்டத்தை மீறும் வெளிநாட்டவர்களை விரைவாக நாடுகடத்துதல்.

உண்மையில் பாதுகாப்பு தேவைப்படுவோருக்கும், பொருளாதார நோக்கில் வருவோருக்கும் இடையே தெளிவான வேறுபாட்டை ஏற்படுத்துதல்.

நிராகரிக்கப்பட்ட அடைக்கலக் கோரிக்கையாளர்களை விரைவாக அவர்களது நாடுகளுக்கு திருப்பி அனுப்பும் நடைமுறையை வலுப்படுத்துதல்.

### FDP-க்கும் அழுத்தம்

தாய் கட்சியான FDP.Die Liberalen இனி மிதமான அணுகுமுறையை விடுத்து, குடியேற்றம் மற்றும் அடைக்கலக் கொள்கையில் தெளிவான, உறுதியான மற்றும் கடுமையான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்றும் Jungfreisinnige வலியுறுத்தியுள்ளது.

### அரசியல் முக்கியத்துவம்

சுவிட்சராந்தில் குடியேற்றம் மற்றும் அடைக்கலக் கொள்கை தற்போது முக்கிய அரசியல் விவாதமாக மாறியுள்ளது. இந்த நிலையில், வலதுசாரி கட்சிகள் மட்டுமல்லாமல், மத்திய-வலதுசாரி FDP-யின் இளைஞர் அமைப்பும் கடுமையான சீர்திருத்தங்களை கோருவது அரசியல் வட்டாரங்களில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.




# அமெரிக்காவில் UBS வங்கிக்கு 125 மில்லியன் டொலர் அபராதம்

## பணமோசடி கண்காணிப்பு குறைபாடுகள் காரணம்

சுவிட்சர்லாந்தின் மிகப்பெரிய வங்கிகளில் ஒன்றான UBS, பணமோசடி தடுப்பு கண்காணிப்பில் ஏற்பட்ட கடுமையான குறைபாடுகள் காரணமாக அமெரிக்க அதிகாரிகளால் 125 மில்லியன் அமெரிக்க டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க பணமோசடி தடுப்பு அமைப்பான FinCEN, 2019 முதல் 2023 வரை ஆயிரக்கணக்கான சந்தேகத்திற்கிடமான நிதி பரிவர்த்தனைகளை உரிய நேரத்தில் அதிகாரிகளிடம் அறிவிக்கத் தவறியதாக UBS மீது குற்றம் சாட்டியுள்ளது. இந்த வழக்கில் அமெரிக்க SEC, CFTC மற்றும் FINRA ஆகிய நிதி ஒழுங்குமுறை அமைப்புகளும் இணைந்து விசாரணை நடத்தின.

விசாரணையின்படி, காலாவதியான கண்காணிப்பு முறைமையால் 7.6 பில்லியன் டொலர் மதிப்பிலான சுமார் 52,000 வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைகள் சரியாக கண்காணிக்கப்படவில்லை. பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய முறைமையிலும் தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக மேலும் 2.7 பில்லியன் டொலர் மதிப்பிலான சுமார் 8,000 பரிவர்த்தனைகள் முறையாக பதிவாகவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ரஷ்யா மற்றும் லத்தீன் அமெரிக்காவுடன் தொடர்புடைய சில வாடிக்கையாளர்களின் அபாய மதிப்பீட்டிலும் தேவையான கவனம் செலுத்தப்படவில்லை என்றும், ஒரு வழக்கில் அமெரிக்க தடைக்குட்பட்ட ரஷ்ய ஒலிகார்க்குடன் தொடர்பு பின்னர் கண்டறியப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

க்ஆகு தனது பணமோசடி தடுப்பு திட்டத்தை சுயாதீன நிபுணர்களின் மூலம் மீளாய்வு செய்யவும், குறிப்பாக அமெரிக்க தெற்கு எல்லை, ஈரான், ரஷ்யா மற்றும் வெனிசுவேலா தொடர்பான அபாயங்களை வலுப்படுத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் ஏற்பட்ட சமரசத்தை க்ஆகு ஏற்றுக்கொண்டுள்ளதுடன், குற்றச்சாட்டுகளை அதிகாரப்பூர்வமாக ஒப்புக்கொள்ளவில்லை. கடந்த காலத்தில் நிலவிய பிரச்சினைகளுக்கு இதன் மூலம் முடிவுகட்டப்பட்டுள்ளது. கண்டறியப்பட்ட பலவீனங்களைச் சரிசெய்யவும், பணமோசடி தடுப்பு அமைப்பை மேலும் வலுப்படுத்தவும் ஏற்கனவே பெருமளவு முதலீடு செய்துள்ளோம் என்று வங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது.

# "High Protein" உணவுப் போக்கு



## உணவுக் கோளாறுகளுக்கு வழிவகுக்கும் அபாயம் என நிபுணர் எச்சரிக்கை

“High Protein“ என்ற பெயரில் சந்தையில் அதிகரித்து வரும் உணவுப் பொருட்கள் தொடர்பாக ஊட்டச்சத்து உளவியல் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். தேவையில்லாமல் அதிக புரதச்சத்து உணவுகளை உட்கொள்வது, குறிப்பாக இளைஞர்களிடம் உணவுக் கோளாறுகள் (Eating Disorders) மற்றும் உடற்பயிற்சி அடிமைத்தனம் போன்ற பிரச்சினைகளை உருவாக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேர்னைச் சேர்ந்த ஊட்டச்சத்து உளவியல் ஆலோசகர் டேனியலா ஷெங்க் கூறுகையில், சமூக ஊடகங்களில் பரவும் அழகியல் மற்றும் தசை வளர்ப்பு குறித்த விளம்பரங்களே இந்த ‘‘High Protein‘‘ போக்கை அதிகரித்துள்ளன என்றார். குறிப்பாக ‘‘எப்படியும் தசைகளை வளர்க்க வேண்டும்‘‘ என்ற எண்ணம் சில இளைஞர்களை ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கங்களுக்கு இட்டுச் செல்கிறது என்றும் அவர் எச்சரித்தார்.

இன்றைக்கு தயிர், புட்டிங், பீட்சா, முஸ்லி, பாஸ்தா உள்ளிட்ட பல உணவுப் பொருட்கள் ‘‘High Protein‘‘ என்ற பெயரில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால் இயல்பாகவே புரதச்சத்து அதிகம் கொண்ட குறைந்த கொழுப்பு குவார்க் (Magerquark) போன்ற உணவுகளும் தற்போது புதிய பெயரில் சந்தைப்படுத்தப்படுகின்றன. உண்மையில் அவற்றின் ஊட்டச்சத்து பெரிதாக மாறவில்லை என்றும் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சுவிட்சர்லாந்தின் உணவுப் பாதுகாப்பு மற்றும் கால்நடை அலுவலகம் (BLV) தெரிவித்துள்ளதாவது, ஆரோக்கியமான வயது வந்த ஒருவருக்கு ஒரு கிலோ உடல் எடைக்கு 0.8 முதல் 1 கிராம் புரதச்சத்து போதுமானது. கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், முதியவர்கள் மற்றும் தீவிரமாக உடற்பயிற்சி செய்பவர்களுக்கு மட்டுமே இதைவிட சற்று அதிக புரதச்சத்து தேவைப்படலாம்.

அதேவேளை, Aldi, Lidl, Coop, Migros உள்ளிட்ட சுவிஸ் சில்லறை விற்பனை நிறுவனங்கள், வாடிக்கையாளர்களின் அதிகரித்து வரும் தேவைக்கேற்ப ‘‘High Protein‘‘ உணவுப் பொருட்களின் வரிசையை தொடர்ந்து விரிவுபடுத்தி வருவதாக தெரிவித்துள்ளன.

எனினும், மருத்துவ மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்கள் வலியுறுத்துவதாவது, சிறப்பு மருத்துவத் தேவை அல்லது தீவிர உடற்பயிற்சி இல்லாதவர்கள், கூடுதல் புரதச்சத்து உணவுகளைத் தேடி உட்கொள்ள வேண்டிய அவசியமில்லை. சமநிலையான உணவுமுறையே உடல்நலத்திற்கு சிறந்தது என்பதாகும்.



# சுவிட்சர்லாந்தில் டிசம்பர் முதல் பொதுப் போக்குவரத்து கட்டணம் உயரும்

## GA சந்தா கட்டண உயர்வு குறைக்கப்பட்டது

சுவிட்சர்லாந்தில் 2026 டிசம்பர் மாதம் முதல் ரயில், பேருந்து மற்றும் பிற பொதுப் போக்குவரத்து சேவைகளின் கட்டணங்கள் உயரவுள்ளன. இருப்பினும், முதலில் அறிவிக்கப்பட்டதை விட Generalabonnement (GA) சந்தா கட்டண உயர்வு குறைக்கப்பட்டுள்ளதாக Alliance SwissPass அறிவித்துள்ளது. இந்த மாற்றம் விலை கண்காணிப்பு அதிகாரியுடன் (Preisberwacher) நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்டது.

புதிய எஅ கட்டணங்கள்

2ஆம் வகுப்பு GA

புதிய விலை: CHF 4,095

முன்பு திட்டமிட்ட உயர்வு: CHF 200

தற்போது இறுதி உயர்வு: CHF 100

1ஆம் வகுப்பு GA

புதிய விலை: CHF 6,770

முன்பு திட்டமிட்ட உயர்வு: CHF 330

தற்போது இறுதி உயர்வு: CHF 250

மற்ற மாற்றங்கள்

Halbtax சந்தா CHF 5 உயர்கிறது.

குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் குடும்பங்களுக்கான கட்டணங்களில் மாற்றம் இல்லை அல்லது மிகக் குறைந்த உயர்வே இருக்கும்.

2027 ஆம் ஆண்டில் CHF 90 மில்லியன் மதிப்பிலான Sparbillette (தள்ளுபடி டிக்கெட்டுகள்) வழங்க SBB திட்டமிட்டுள்ளது.

சராசரி கட்டண உயர்வு

முதலில் அறிவிக்கப்பட்ட 3.9% சராசரி கட்டண உயர்வு தற்போது 3.6% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அதிகரித்து வரும் ஊழியர், எரிசக்தி, பொருட்கள் மற்றும் பராமரிப்பு செலவுகளை ஈடுகட்ட இந்த உயர்வு அவசியம் என Alliance SwissPass தெரிவித்துள்ளது.

ஙஇகு அமைப்பின் விமர்சனம்

போக்குவரத்து கழகம் VCS இந்த மாற்றம் 'உண்மையான தீர்வு அல்ல; வெறும் ஒப்பனைத் திருத்தம் (Cosmetic correction)' என விமர்சித்துள்ளது. பொதுப் போக்குவரத்தை மக்கள் அதிகம் பயன்படுத்த வேண்டும் என்றால், கட்டணங்களை தொடர்ந்து உயர்த்தாமல் சேவைகளையும் மேம்படுத்த வேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள்ளது.



# மத்திய கிழக்கு போர் எதிரொலி; சூரிச் சுற்றுலாத்துறையில் வீழ்ச்சி

மத்திய கிழக்கில் நிலவும் போர் மற்றும் அதனால் ஏற்பட்ட விமானப் போக்குவரத்து பாதிப்புகள் காரணமாக, 2026ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் சூரிச் பிராந்தியத்தின் சுற்றுலாத்துறை 1.4% வீழ்ச்சியை சந்தித்துள்ளது. ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் வளர்ச்சி காணப்பட்ட போதிலும், மார்ச் முதல் தங்கும் இரவுகளின் (Logiernchte) எண்ணிக்கை தொடர்ந்து குறைந்துள்ளது.

முக்கிய தகவல்கள்

இந்தியாவிலிருந்து வந்த சுற்றுலாப் பயணிகளின் தங்கும் இரவுகள் 27.9% குறைந்துள்ளன.

தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து வந்தோரின் வருகை 25.8% வீழ்ச்சியடைந்துள்ளது.

வளைகுடா நாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் கணிசமாகக் குறைந்துள்ளனர்.

இதற்கு மாறாக, வட அமெரிக்கா சந்தையில் 0.8% வளர்ச்சி பதிவாகியுள்ளது.

**சுவிஸ் மற்றும் ஐரோப்பிய பயணிகள் ஆதரவு**

சுவிட்சர்லாந்துக்குள் பயணம் செய்த உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகரித்ததால் வீழ்ச்சியின் தாக்கம் ஓரளவு குறைந்தது. முதல் முறையாக, மொத்த தங்குமிடங்களில் 40%க்கும் அதிகமானவை சுவிஸ் பயணிகளால் நிரம்பியுள்ளன. மேலும், ஆஸ்திரியா மற்றும் ஸ்பெயின் நாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் அதிகரித்துள்ளனர்.

★ஹோட்டல்களைத் தாண்டிய பாதிப்பு

★182 நிறுவனங்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில்,

★உணவகங்கள்

★சில்லறை வணிகங்கள்

★பொழுதுபோக்கு நிறுவனங்கள்

என பல துறைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சுமார் பாதி நிறுவனங்கள் சுற்றுலாப் பயணிகள் செலவுகளை கட்டுப்படுத்தி வருவதாக கூறியுள்ளன.



# மனித வாழ்க்கை விழுமியங்களும் போல, ஒப்ப, புரைய என்றாகி விட்ட நாளாந்த வாழ்க்கையும்

**கடந்த வாரத் தொடர்ச்சி...**



சின்னத்தம்பி குருபரன்

'வரவு எட்டணா, செலவு பத்தணா' என்பதே தமது வாழ்க்கையாகப் பலர் வாழ்ந்து கொண்டிருக்கினறனர். கையில் பணம் இல்லாவிட்டாலும் கடன் வாங்கியாவது செலவு செய்வோம் என்ற நிலைக்குப் பலரும் மாறிவிட்டனர். தமது கையிருப்பு, வருமானம் என்பவற்றை வைத்துத் திட்டமிடாமல் அவர் அப்படிச் செய்திருக்கிறார். இவர் இப்படிச் செய்திருக்கிறார், அவ்வாறே நாமும் செய்வோம் எனப் பலரை ஒப்பிட்டுக் காட்டிச் செலவுக்குத் திட்டமிடுகின்றனர். வாழ்க்கை என்பது திட்டமிட்டு வடிவமைக்கப்பட வேண்டியது. செலவும் அவ்வாறுதான். வரவு. செலவு, பழக்க வழக்கம், நாளாந்தச்; செயற்பாடுகள் எல்லாவற்றையும் திட்டமிட்டுக் குடும்பத்தினருடன் கலந்துரையாடி, வெளிப்படைத் தன்மையோடு விட்டுக் கொடுப்பு, புரிந்துணர்வுடன் செயற்படும் போதுதான் வாழ்கையின் சுவாரசியம் உணரப்படும். நேரான விடயங்கள் பிரபல்யம் பெறுவதையும்விட எதிரான விடயங்கள் மிகச் சீக்கிரம் பெருவாழ்வு பெற்றுவிடும். உண்மை பெரும்பாலும் உறங்கி இருக்க பொய்மை சீக்கிரம் விழித்தெழுந்து பிரபல்யம் பெற்று விடுகின்றன. சில வேளைகளில் பொய்மை பல ஆண்டுகள் நிலைபெற்றிருக்கும். பல குடும்பங்களிலும் அவ்வாறுதான் உண்மை வெளிப்படாமல் பொய்மை வாழ்ந்து கொண்டிருக்கும். அப்போது சகலவற்றிலும் போல, ஒப்ப, புரைய உருபுகள் எதிர்மறையாகச் செயற்பட அரம்பிக்கும். சந்தேகங்களும், ஒப்பீடுகளும், எதிர்பார்க்கைகளும் மேலோங்கி குடும்பத்தின் அமைதி, சந்தோசம் ஆகியன எம்மைவிட்டுச் வெகுதூரம் சென்றுவிடும்.

எனக்குத் தெரிந்த ஒருவர்; தனது மகளின் திருமணத்துக்கு ஆயிரம் பேருக்கு அழைப்புக் கொடத்து மண்டபத்தில் நடாத்தி இருக்கின்றார். மாப்பிள்ளை டொக்டராம் மகளுக்குப் பத்துப் பவுணில் தாலிக்கொடி கட்டி இருக்கின்றார். அதைப் பார்த்துப் பொறமைப்படட மற்றவர் தனது மகளுக்கு வரும் மாப்பிள்ளை பதினொரு பவுணில்



தாலிக்கொடி கட்ட வேண்டும். அதைவிடச் சிறப்பாகச் சபை நடாத்திக் காட்டட வேண்டும் எனப் போல சிந்தித்துத் திருமணம் நடாத்திக்; கடன் தொல்லையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

அதேபோல் அலுவலகம் ஒன்றில் வேலை செய்பவர் மாடி வீடு கட்டி இருக்கின்றார். அவர் மாடி வீடு கட்டியதைப் பார்த்த இன்னொருவர் கடன் பட்டாவது ஒரு மாடி வீடு கட்டி முடிக்க வேண்டும் எனத் தனது செல்வங்கள் யாவற்றையும் செலவிட்டு, நகை நட்டுக்களை ஈடு வைத்தும், வங்கியில் கடன் பெற்றும்; வீட்டைக் கட்டி முடித்திருக்கின்றார். மற்றவரை ஒப்பிட்டுப் புனைந்து வீடு கட்டியதனால் தற்போது வீட்டுச் செலவுக்குக் கடன் வாங்கிக் கொண்டிருக்கின்றார் செலவைத் திட்டமிட்டுக் கலந்துரையாடி அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றுச் செயற்பட்டிருந்தால் இத்தகைய நிலைமை அவருக்கு வந்திருக்காது.

அதேபோல் வீட்டுப் பாவனைப் பொருட்கள், சிமார்ட் கைபபேசி, மோட்டார் சைக்கிள், கார், உடு துணிகள், தனிப்பட்ட பாவனைப் பொருட்கள், ஆடம்பரப் பொருட்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்யுமுன்னர் தமது கையிலுள்ள பணம், அவற்றின் தேவை, அதன் முக்கியத்துவம் ஆகியவற்றைச் சிந்தித்து அதன் அடிப்படையில் பொருளைக் கொள்வனவு செய்திருந்தால் பல பிரச்சினைகளைத் தவிர்த்திருக்கலாம். அவ்வாறு செயற்படாமல் கடன் மற்றும் தவணைக் கொள்வனவு முறையில் கொள்வனவு செய்து பலர் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவரைப்போல் சிமார்ட் கைப்பேசி, இவரைப்போல் குளிர்சாதனப் பெட்டி, பக்கத்து வீட்டுக்காரரைப் போல் சிமார்ட் தொலைக்காட்சி, நண்பரைப்போல் பல்சர் மோட்டார் சைக்கிள், தங்கையின் கணவரைப்போல் கார் எனப் போல, ஒப்ப, புரைய என எதிர்பார்த்தும் கொள்;வனவு செய்தும் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையைப் பலர் தொலைத்துக் கொண்டிருக்கின்றனர்.

நாம் வாழ வேண்டிய மகிழ்ச்சிகரமான வாழ்க்கையைப் போல, ஒப்ப, புரைய வலிந்து கொண்டு தமது வாழ்க்கையை வாழ முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். தொழில் தேடுவதிலும், பிள்ளைக்கு மாப்பிள்ளை, பெண் பாரப்பதிலும் தொழில் செய்வதிலும் மற்றவரைப் பார்த்துச் செயற்பட்டுக் கொண்டிருக்கினறனர். இன்று பலர் ஒவ்வொரு விடயத்திலும் இவ்வாறு நடந்து கொண்டிருப்பது எதிர்காலத்துக்கும் குடும்பத்துக்கும் நல்லதல்ல. பெரும்பாலான தாய், தந்தையர் பிள்ளைகளுக்குத் தமது கஷ்டத்தைச் சொல்லி வளர்பதில்லை.




தமது பிள்ளைகள் மற்றவரைப்போல் வைத்தியராக, பொறியியலாளராக, வழக்கறிஞராக, கணக்காளராக, ஆசிரியராக, உயர் அதிகாரியாக வருவதை விரும்பி பிள்ளைகளின் இயலுமை, விருப்பம் என்பவற்றைக் கவனத்தில் கொள்ளாது கல்வியைத் திணிக்கினறனர். அதனால், பல பிள்ளைகளின் எதிர் காலத்தைக் கேள்விக்குறி ஆக்குகின்றனர். அதேபோல் பிள்ளைகளும் தமது இயலுமை, விருப்பம், ஈடுபாடு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளாது மற்றவரை பார்த்துப் பாடத் துறையைத் தெரிவு செய்து எதிர்காலத்தைக் குழி தொண்டிப் புதைத்து விடுகின்றனர்.

எந்தக் கருமத்தையும் செய்ய முற்படும் முன்னர் ஒன்றுக்குப் பல தடைவை சிந்தித்து முடிவெடுத்துச் செயலில் இறங்க வேண்டும். செயலில் இறங்கிய பின்னர் அதன் முன்னேற்றத்தைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமே தவிர திட்டத்தின் சரி, பிழை பற்றி ஐயம் கொள்ளக் கூடாது. அதனையே வள்ளுவர். எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்ப திழுக்கு எனத் திட்டமிடல் பற்றிக் கூறியிருக்கின்றார். நாம மற்றவரைப் பார்த்து, அவரைப்போல் பிரதி பண்ணி கருமங்களைச் செய்வதையும் விட நமக்காக நாம் செய்தல் வேண்டும். நமது பொருளாதாரச் சூழல், கையிருப்பு என்பவற்றைக் கொண்டு நம்மிடம் உள்ளதுக்குள் செய்து முடிக்கும் போது வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமையும். அதைவிடுத்து அவர் கூறுகிறார், இவர் சொல்கிறார், மனைவி, பிள்ளைகள் கூறுகின்றனர் என அதன்படி செயற்பட முனைந்தால் நிம்மதியைத் தொலைத்து விடுவோம். அளவோடு, பெருமையோடு, வரவுக்கு ஏற்ப செலவு செய்த மகிழ்வோடு வாழ்வதில்தான் நிம்மதி இருக்கிறது.

இவ்வுலகில் நமக்கென நிர்ணயிக்கப்பட்ட இடத்தில், நமது குடும்பத்தில் நாம் நமக்காக வாழ்வதில் சந்தோசம், மகிழ்ச்சி, நிம்மதி கிடைப்பது போல் எதிலும் கிடைப்பதில்லை. இந்தப் பெறுமதியான, அழகான வாழ்க்கையில் இல்லாத, கிடைக்க முடியாத ஒன்றைப் பற்றிச் சிந்தித்துக் காலத்தைக் கடத்துவதைவிட நடிகர் ரஜினி முத்து படத்தில் கூறுவது போல் ‘கிடைக்கிறது கிடைக்காமல் இருக்காது, கிடைக்காதது கிடைக்காது’ என்பதை மனதில் கொண்டு சந்தோசத்தை அனுபவித்து நிம்மதியாடு வாழ்வோம்.





# சுவிட்சர்லாந்தின் நடுநிலைக் கொள்கையை அரசியலமைப்பில் நிரந்தரமாக்கும் முயற்சி

## “ஆம்” அணியின் பிரச்சாரம் ஆரம்பம்

செப்டம்பர் 27, 2026 அன்று நடைபெறவுள்ள நடுநிலைக் கொள்கை முன்முயற்சி (Neutralittsinitiative) தொடர்பான மக்கள் வாக்கெடுப்பை முன்னிட்டு, ‘ஆம்’ (Ja) அணியினர் தங்களது தேர்தல் பிரச்சாரத்தை அதிகாரப்பூர்வமாக ஆரம்பித்துள்ளனர். இந்த மக்கள் முன்முயற்சியின் நோக்கம், சுவிட்சர்லாந்தின் நிரந்தர ஆயுத நடுநிலைக் கொள்கையை அரசியலமைப்பில் உறுதிப்படுத்துவதாகும்.

முன்முயற்சியாளர்களின் கருத்துப்படி, பல ஆண்டுகளாக சுவிட்சலாந்தின் பாரம்பரிய நடுநிலைக் கொள்கை படிப்படியாக பலவீனப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால், எதிர்காலத்தில் அரசுகள் அந்தக் கொள்கையை தங்கள் விருப்பத்திற்கேற்ப மாற்றும் அபாயம் இருப்பதாக அவர்கள் எச்சரிக்கின்றனர். இதைத் தடுக்கவே நடுநிலைக் கொள்கையை அரசியலமைப்பில் நிரந்தரமாகச் சேர்க்க வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

நடுநிலைக் கொள்கையே சுவிட்சலாந்தை போர்களிலிருந்து பாதுகாத்ததுடன், நாட்டிற்கு அமைதி, பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளத்தையும் வழங்கியுள்ளதாக முன்முயற்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாகவே உலக நாடுகள் சுவிட்சர்லாந்தை மதிப்புடன் அணுகியதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்த முன்முயற்சி நிறைவேற்றப்பட்டால், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபை (UN Security Council) அங்கீகரிக்கும் தடைகளைத் தவிர, பிற நாடுகளுக்கு எதிராக சுவிட்சர்லாந்து தனிப்பட்ட முறையில் பொருளாதாரத்



தடைகளை விதிக்க முடியாது. இதற்கான விதிமுறைகள் அரசியலமைப்பிலேயே சேர்க்கப்பட வேண்டும் என்பதே முன்முயற்சியின் முக்கிய அம்சமாகும்.

இந்த முன்முயற்சியின் முக்கிய முகங்களில் ஒருவரான முன்னாள் கூட்டாட்சி அமைச்சர் கிறிஸ்டோஃப் ப்ளோஷர் (Christoph Blocher), சிறிய நாடுகளுக்கு நடுநிலைக் கொள்கை மிகவும் அவசியமானது என்று தெரிவித்துள்ளார். ஒரு நடுநிலை நாட்டைத் தாக்க எந்த எதிரி நாடும் தயங்க வேண்டும்; அதுவே நடுநிலையின் உண்மையான பாதுகாப்பு என்று அவர் கூறினார்.

தற்போது கூட்டாட்சி அரசு பின்பற்றும் நெகிழ்வான (Flexible) நடுநிலைக் கொள்கை சுவிட்சர்லாந்துக்கு ஆபத்தானது என்றும் ப்ளோஷர் விமர்சித்தார். இதன் காரணமாக சுவிட்சர்லாந்து தற்போது ரஷ்யாவின் ‘நட்பற்ற நாடுகள்’ பட்டியலில் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். அதேவேளை, இந்த முன்முயற்சி தோல்வியடைந்தாலும், சுவிட்சர்லாந்தின் நடுநிலைக் கொள்கை சட்டபீதியாக தொடரும் என்பதையும் அவர் ஒப்புக்கொண்டார்.

Pro Schweiz அமைப்பின் தலைவர் ஸ்டீபன் பீட்டிகர் (Stephan Rietiker), உலக அதிசக்திகளுக்கிடையிலான பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், நம்பகமான நடுநிலைக் கொள்கையே சுவிட்சர்லாந்தின் சுதந்திரம், பாதுகாப்பு மற்றும் சுயாட்சியை உறுதிப்படுத்தும் என்று தெரிவித்தார். ஆயுத நடுநிலைக் கொள்கை நாட்டின் பாதுகாப்புத் தயார் நிலையையும் மனிதாபிமான மரபையும் வெளிப்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

எனினும், சமீபத்தில் வெளியான கருத்துக் கணிப்புகள் இந்த முன்முயற்சிக்கு பெரும்பான்மை ஆதரவு கிடைப்பது சிரமமாக இருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன. இருந்தாலும், இது கட்சி அரசியலைக் கடந்து சுவிட்சர்லாந்தின் எதிர்காலத்தைப் பற்றிய முக்கியமான தீர்மானம் என்பதால் மக்கள் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் ‘ஆம்’ அணியினர் உள்ளனர்.

இந்த முன்முயற்சிக்கு சுவிட்சர்லாந்தின் பெரிய அரசியல் கட்சிகளில் குங்க மட்டுமே முழுமையான ஆதரவை வழங்கியுள்ளது. வெளிநாட்டு அழுத்தங்களுக்கு ஏற்ப சுவிட்சர்லாந்தின் நடுநிலைக் கொள்கை மாறக் கூடாது என்பதே அந்தக் கட்சியின் நிலைப்பாடாகும்.

# சுவிசில் ஆகஸ்ட் மாத முக்கிய நிகழ்வுகள்

ஆகஸ்ட் 4 – 22 : Floss Festival & Basel
ரைன் (Rhine) ஆற்றின் மீது மிதக்கும் மேடையில் நடைபெறும் திறந்தவெளி இசை விழா.

★ உள்ளூர் மற்றும் சர்வதேச கலைஞர்கள்
★ சுமார் 50,000 பார்வையாளர்கள்
★ கரையோர இருக்கைகள் இலவசம்
★ படகில் அமர்ந்து பார்க்க கட்டண வசதி

ஆகஸ்ட் 5 – 15 : Locarno Film Festival
சுவிட்சர்லாந்தின் மிகப்பெரிய சர்வதேச திரைப்பட விழா.

இந்த ஆண்டு:
★ 103 உலகத் திரைப்பட முதற்காட்சிகள்
★ Piazza Grande-வில் 8,000 இருக்கைகள்
★ உலகின் மிகப்பெரிய திறந்தவெளி திரைகளில் ஒன்று

ஆகஸ்ட் 6 – 9 : Thunfest
Bernese Oberland பகுதியின் மிகப்பெரிய நகர விழா.
★நேரடி இசை
★ DJ நிகழ்ச்சிகள்
★ குடும்ப பொழுதுபோக்கு
★ உணவுக் கண்காட்சிகள்

ஆகஸ்ட் 8 : Verzasca Country Festival
★ Ticino மாநிலத்தின் Sonogno கிராமத்தில் நடைபெறும் அமெரிக்க Country Music விழா.
★ Verzasca பள்ளத்தாக்கின் இயற்கை அழகையும் இசையையும் ஒன்றாக அனுபவிக்கலாம்.

ஆகஸ்ட் 8 : Zurich Street Parade
உலகின் மிகப்பெரிய Techno இசை ஊர்வலம்.
★ஆயிரக்கணக்கான இசை ரசிகர்கள்
★இசை வாகனங்கள்
★சூரிக் நகரம் முழுவதும் நடனக் கொண்டாட்டம்
★ Utoquai முதல் Zrich ஏரிக்கரை வரை

★ ஆகஸ்ட் 15 : Zurich Limmat Swim
வருடத்தில் ஒரே நாளில் Limmat ஆற்றில் பொதுமக்கள் நீந்த அனுமதிக்கப்படும் நிகழ்வு.

★ டிக்கெட்டுகள் மிகவும் குறைவு
★ நிகழ்விற்கு 3 நாட்களுக்கு முன் மாலை 5 மணிக்கு விற்பனை
★ மோசமான வானிலை இருந்தால் மாற்று நாள்: ஆகஸ்ட் 22

ஆகஸ்ட் 16 : Lake Lugano Crossing
1932 முதல் நடைபெற்று வரும் 2.5 கி.மீ. ஏரி நீச்சல் போட்டி.
★ 14 வயதுக்கு மேற்பட்டவர்கள் பங்கேற்கலாம்.
★ இறுதியில் Pasta Party ஏற்பாடு செய்யப்படும்.

ஆகஸ்ட் 22 – 23 : Lausanne Afro Fusions Festival
Vaud மாநிலத்தின் மிகப்பெரிய ஆப்பிரிக்க கலாசார விழா.
இதில்:
★இசை நிகழ்ச்சிகள்
★கலாசார காட்சிகள்
★கலைக் கண்காட்சிகள்
★குடும்ப நிகழ்ச்சிகள்






# இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கையில் அடிவாங்கிய பின்னர் தமிழ்நாட்டில் சென்று ஆற்றிய உரை

இலங்கை இந்திய ஒப்பந்தம் 1987, யூலை,29, ல் இல்ங்கை ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்தன, இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி கைச்சாத்திட்டு மறுநாள் 1987,யூலை,30 அன்று கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் மரியாதை அணிவகுப்பைப் பார்வையிட்டபோது, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை கடற்படை வீரர் விஜிகே ரோகண டி சில்வா வால் துப்பாக்கியால் தாக்கப்பட்டார்.

தாக்குதலை வாங்கி இந்தியா திரும்பிய ராஜீவ்காந்தி 1987,ஆகஷ்ட்,02, ல் சென்னை மெபீனாகடற்கரையில் அணிதிரண்டு இருந்த தமிழக மக்கள் முன் அவர் ஆற்றிய உரை இது.

**அனைவருக்கும் வணக்கம்!**

இலங்கையில் அமைதிச் சூழ்நிலை ஒன்று பட்டிருப்பதற்காக நாம் இன்று கூடியுள்ளோம்...

ஒப்பந்தத்தில் கையெழுத்திட நான் இலங்கைக்குப் போகும் முன்னர் எல்லாத் தமிழ்ப் போராளிகளிடமும், அதிகளவு மிதவாத உணர்வு கொண்ட இலங்கைத் தமிழர்களிடமும் நான் பேசினேன்.

நீதி மற்றும் சமத்துவத்தைப் பெறப் போராடும் இவர்களிடம் நான் ஆலோசனை மேற்கொண்டேன்.

நாங்கள் கையெழுத்திட்ட இந்த ஒப்பந்தத்தை தமிழ் போராளிகள் அனைவரும் புரிந்து கொண்டனர்.

இலங்கையின் ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்காமல், இலங்கை மிழர்கள் கோரிய அனைத்தையும் தர இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது

இலங்கையின் மூன்றில் ஒரு பகுதி தனி மாகாணமாக்கப்பட்டு, தமிழர்கள் அதில்

பெரும்பான்மையினராக வசிக்க இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.


இந்திய அரசின் கீழ் இருக்கும் மாநிலங்கள் போன்றே மாநில சுயாட்சி உரிமையும் அவர்களுக்கு உண்டு .....

நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. கருத்து வேறுபாட்டையும் வன்முறையையும் போரையும் நிறுத்த வேண்டிய நேரம் இது.

இது புனரமைக்க வேண்டிய தரம். தேசிய இணக்க உணர்வை ஏற்படுத்த வேண்டிய கட்டம் உருவாகியிருக்கிறது. மறு இணக்கத்தையும் மறு சீரமைப்பையும் மேற்கொள்ள வேண்டிய இந்தக் கடமையில் நம்மால் இயன்ற எல்லா வகையிலும் நாம் உதவ வேண்டும்.மேலும் அதிக வன்முறையாலும் மேலும் அதிக உயிரிழப்புக்களாலும் நாம் அடைய வேண்டியது எதுவுமில்லை.

அமைதியைக் கொண்டு வருவோம். உயிர் உடமை அழிவைத் தடுப்போம். இந்த ஒப்பந்தத்திற்கு எதிரானோர் மீது நாம் இரக்கம் காட்டத் தேவையில்லை. ஏனென்றால் இந்த ஒப்பந்தத்திற்கு எதிரானோர் இலங்கைத் தமிழர்களின் நலன்களுக்கு எதிரானவர்கள் ஆவார்கள்.

சில போராளிக்குழுக்கள் ஓரளவு தயக்கம் காட்டுகிறார்கள். அது சொந்தப் பாதுகாப்பைக் கருதி ஏற்பட்டிருக்கக்கூடும். அல்லது இலங்கையின் எதிர்கால வாழ்வில் தங்களுக்குரிய இடம் என்ன என்பதைக் குறித்த கலக்கமாக இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு நான் உறுதி கூறியிருக்கிறேன். இந்த ஒப்பந்தம் அவற்றையெல்லாம் கருத்திற் கொண்டிருக்கிறது. இலங்கையின் ஒவ்வொருவருக்கும் சீரமைப்புப் பணியில் பங்கும் பாதுகாப்பும் உண்டு என்பதை உறுதிப்படுத்துவோம்... வட பகுதியில் இருக்கிற ஒவ்வொருவருக்கும் சீரமைப்புப் பணியில் பங்கும் பாதுகாப்பும் உண்டு என்பதை உறுதிப்படுத்து



வோம். இது வன்முறைக்கு முடிவு காணும் நேரம். பூசல்களுக்கும் பழிவாங்குதல்களுக்கும் இது நேரமில்லை.

இலங்கையில் உள்ள பல்வேறு வகுப்பினருக்குமிடையே புதிய நட்புறவையும் இணைப்பையும் உருவாக்கி நாட்டைச் சீரமைப்பதற்கான அமைதியைக் கொண்டு வரவேண்டிய நேரம். நல்லெண்ணத்தையும் இணக்க உணர்வையும் ஏற்படுத்த நம்பிக்கையையும் பற்றையும் ஏற்படுத்த வேண்டிய நேரம். இழப்புத்துயரில் வாடுவோரைத் தேற்ற வேண்டிய நேரம், புனரமைக்கவும் புத்துயிர் ஊட்டவும் உழைக்க வேண்டிய நேரம்.

வேதனையும் துயரமும் நிறைந்த ஒரு கட்டத்திற்கு இந்த ஒப்பந்த ஒரு முடிவு காண்கிறது. வேதனைகளையும் இன்னல்களையும் முடித்து வைத்து, அமைதி யுகம் மலர வகை செய்கிறது.

இலங்கை வரலாற்றின் திருப்பு முனையாக அமையும் இந்த நேரத்தில் இறந்தோரின் நினைவுக்கு அஞ்சலி செலுத்துகிறோம்: விதவைகள் அனாதையாக்கப்பட்டோர் ஆகியோருக்கு அனுதாபம் தெரிவிக்கிறோம்; புதல்வர்களை இழந்த

தாய்மார்களுக்கும் தந்தையரை இழந்த புதல்வியருக்கும் நமது இரங்கல்களைத் தெரிவிக்கிறோம். ஆனால் இவற்றை நினைவு கூரும்போது மேலும் இரத்தம் சிந்துதல் தவிர்க்கப்பட வேண்டும்.

இலங்கையில் அமைதியோடும், கௌரவத்தோடும், கண்ணியத்தோடும் தமிழர்கள் தொடர்ந்து வாழும் போது இந்த நினைவுக்கு சிறப்பான அஞ்சலி செலுத்தியவர்களாவோம். இந்த ஒப்பந்தத்தின் மூலம் அது சாத்தியமாகியிருக்கிறது.

அமைதி மீண்டும் கொண்டுவரப்பட்டுவிட்டாலும் நாம் எதார்த்த உணர்வோடு இருக்க வேண்டும். இப்போது ஏற்பட்டிருக்கும் இந்த அமைதிக்கு நம்மால் இயன்ற வகையில் பாதகமான எதையும் செய்துவிடலாகாது முழுமையாக அமைதி ஏற்பட்ட நிலையிலும் நமது பங்கு தேவை.

இந்த அமைதியை மிக விரைவாகவும் மிக எளிமையாகவும் பெற்றுவிடவில்லை. இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் இடர்ப்பாடுகளும் பிரச்சினைகளும் எழலாம். அப்படி வன்முறைகளும், அத்தகைய கோபதாபங்களும் ஏற்பட்டாலும் அவற்றை உடனடியாகப் போக்கி விட முடியும் என்றும் நாம் எதிர்பாக்க இயலாது. விவாதித்தும், கூடிப் பேசியும் இப்போது அமைதியை ஏற்படுத்தியதைப் போன்று, இனி வரும் பிரச்சினைகளையும் அணுக வேண்டும், தீர்வு காண வேண்டும். அந்த வகையில் தீர்வு காண்பது சாத்தியமானதுதான்,

இந்த ஒப்பந்தத்தை சீர் குலைக்கப் பல சக்திகள் முயலக்கூடும். எந்தெந்தச் சக்திகளின் நடமாட்டங்கள் இந்த ஒப்பந்தத்தால் அகற்றப்படுகின்றனவோ அவை அனைத்தும் இந்த ஒப்பந்தத்தை முனை முறிக்க முயலக்கூடும். வன்முறை மூலமும் கொடுஞ்செயல்கள் மூலமும் பயன்பெற நினைப்போர் இந்த ஒப்பந்தம் நிறைவேறுவதை விரும்ப மாட்டார்கள். ஆனால் நாம்தான். இலங்கையும் – இந்தியாவும்தான். பொறுமையோடும் விடா முயற்சியோடும் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றியாக வேண்டும்.

இரு தரப்பிலும் இருக்கிற தீவிரவாதிகள் இந்த வெளி சக்திகளின் பகடைக்காய்களாக ஆகிவிடக் கூடாது. அமைதியைக் குலைக்க அவைகளை அனுமதிக்கலாகாது. பழிவாங்கும் போக்கிற்கு அவர்கள் நம்மைத் தூண்ட அனுமதிக்கலாகாது. நடைமுறைச் சாத்தியம் உள்ள. செயல்படுத்தத்தக்க நீண்டகால தீர்வுகளைக் காண்பதற்கான ஒரே வழி ஜனநாயக முறைதான். ஜனநாயகத்திற்தான் தீர்வுகள் கிடைக்கும்.

பலரும் இந்த ஒப்பந்தம் காணும் முயற்சியில் ஈடுபட்டதினால் இது சாத்தியமாயிற்று.

1983,ம் ஆண்டு யூன் மாதத்தில் முதன் முதலில் மேற்கொள்ளப்பட்ட தற்காலிக நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக இலங்கை அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா. மறைந்த எனது தாயார் திருமதி இந்திராகாந்தியை உதவிக்காக அணுகியதிலிருந்துதான் நமது தரப்பிலிருந்து பலரும் இதில் ஈடுபாடு காட்டத் துவங்கினர்.

வரலாற்றில் இடம்பெறும் இந்த ஒப்பந்தத்தை எட்டுவதற்கு தங்கள் பங்கினை அளித்த ஒவ்வொருவருக்கும் நான் நன்றி தெரிவித்தாக வேண்டும் என அந்த உரையை நிறைவுசெய்தார்.

இன்று 2026,ஆகஷ்ட்,02, ம் திகதி கடந்த 39 ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாளில் 1987, ஆகஷ்ட்,02, ல், சென்னை மெரீனா கடற்கரையில் தமிழக மக்களுக்கு இலங்கை இந்திய ஒப்பந்தம் பற்றி ராஜீவ் காந்தி விளக்கம் அளித்து ஆற்றிய உரை இது..

**-பா.அரியநேத்திரன்**



ராஜ் சிவநாதன்

# முடிவில்லா பேச்சுவார்த்தை;

# ஜனநாயகத் தலைமையின் தவறவிட்ட ஒரு வாய்ப்பு

ஆறு தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் பேரவை பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பு, இலங்கையின் நீண்ட கால அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வை நோக்கிய முக்கியமான முன்னேற்றமாக அமைந்திருக்க வேண்டியது. ஆனால், கடந்த காலங்களில் நடைபெற்ற பல சந்திப்புகளைப் போலவே, இந்தச் சந்திப்பும் கலந்துரையாடலோடு முடிவடைந்தது; உறுதியான முடிவுகள் எதுவும் வெளிவரவில்லை.

அந்தப் பேரவையின் பிரதிநிதிகள் அரசியலமைப்புத் திருத்தம், நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல், காணி தொடர்பான பிரச்சினைகள், தொல்பொருள் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம், மகாவலி அதிகார சபை ஆகியவற்றின் நடவடிக்கைகளால் வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்கள் உள்ளிட்ட பல முக்கிய விடயங்களை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

அதற்கு பதிலளித்த ஜனாதிபதி, தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை ஒருங்கிணைந்து முன்வைப்பதற்காக இவ்வாறான பேரவையை உருவாக்கியதற்கு தனது நன்றியைத் தெரிவித்தார். அந்த அங்கீகாரம் வரவேற்கத்தக்கது. ஆனால், மக்கள் எதிர்பார்த்திருந்த அரசியல் முன்னேற்றத்திற்கு அது போதுமான பதிலாக அமையவில்லை.

இந்தச் சந்திப்பின் மையக் கேள்வி மாகாண சபைத் தேர்தலே ஆகும். கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசாங்கம், மாகாண சபைத் தேர்தலை நடத்த உறுதிபூண்டுள்ளதாக மீண்டும் மீண்டும் கூறி வருகிறது. இருந்தபோதிலும், இம்முறையும் தேர்தலுக்கான காலக்கெடு, அரசியல் தீர்மானம் அல்லது செயல் திட்டம் எதுவும் அறிவிக்கப்படவில்லை. மாறாக, அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான குழுவுடன் கலந்தாலோசித்து பின்னர் அறிவிப்பதாகவே கூறப்பட்டது.

இதனால் மக்கள் இயல்பாகவே ஒரு கேள்வியை எழுப்புகின்றனர்.

இரண்டு ஆண்டுகளாக பதில் மாறவில்லை என்றால், இந்தச் சந்திப்பின் பயன் என்ன?

மாகாண சபைகள் அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு நிறுவனங்கள். அவற்றை காலவரையற்ற முறையில் செயலிழக்கச் செய்து வைப்பது ஜனநாயகப் பிரதிநிதித்துவத்தை பலவீனப்படுத்துவதோடு, மக்களின்

வாக்குரிமையின் அர்த்தத்தையும் குறைக்கிறது. தேர்தல்கள் இல்லாத ஜனநாயகம் முழுமையான ஜனநாயகமாக இருக்க முடியாது.

இந்தச் சந்திப்பு மாகாண சபைத் தேர்தலைப் பற்றியது மட்டுமல்ல. பேச்சுவார்த்தைகள் நடைமுறை நடவடிக்கைகளாக மாறுமா, அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் செயல்படுத்தப்படுமா, அரசாங்கம் அரசியல் துணிச்சலுடன் முடிவெடுக்குமா என்பதையும் மக்கள் கவனித்துக் கொண்டிருந்தனர். ஆனால், அந்த எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை.

தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு பொதுப் பேரவையை உருவாக்கியிருப்பது வரவேற்கத்தக்க ஜனநாயக முன்னேற்றமாகும். கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், மக்களின் பிரச்சினைகளை ஒரே குரலில் முன்வைக்க அவர்கள் எடுத்த முயற்சி பாராட்டத்தக்கது. அதற்கு அரசாங்கமும் தெளிவான அரசியல் முடிவுகளால் பதிலளித்திருக்க வேண்டும்.

பல இலங்கையர்கள் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவிடம் புதிய அரசியல் கலாசாரத்தை எதிர்பார்த்தனர். வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் தீர்மானமான ஆட்சி என்பவையே அவரது தலைமையின் அடையாளங்களாக அமையும் என நம்பினர். ஆனால், கடந்த கால அரசுகளின் தாமத அரசியலே மீண்டும் தொடர்கிறது என்ற எண்ணம் உருவாகி வருகிறது.

ஒரு தலைவரின் வெற்றி, அவர் எத்தனை சந்திப்புகளை நடத்தினார் என்பதில் அல்ல; பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாமல் உள்ள பிரச்சினைகளில் எப்போது, எவ்வாறு முடிவெடுத்தார் என்பதில்தான் அளவிடப்படுகிறது.

இன்னும் காலம் கடந்துவிடவில்லை.

அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலுக்கான தெளிவான கால அட்டவணையை அறிவிக்க வேண்டும். அதனை நடத்துவதற்கான மீதமுள்ள சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை வெளிப்படையாக விளக்க வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கில் காணி நிர்வாகம் மற்றும் அரச நிறுவனங்களால் எழுந்துள்ள நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு நடைமுறை தீர்வுகளை வழங்க வேண்டும். இவை யாருடைய விசேட கோரிக்கைகளும் அல்ல; அரசியலமைப்பின் அடிப்படையில் அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளாகும்.

பேரவையின் பிரதிநிதிகள் தங்களுடைய பொறுப்பை நிறைவேற்றியுள்ளனர். மக்களின் குரலை ஜனாதிபதியிடம் எடுத்துச் சென்றுள்ளனர்.

இப்போது பொறுப்பு முழுமையாக அரசாங்கத்தின் கைகளில் உள்ளது.

அடுத்த கட்டமாக மீண்டும் ஒரு சந்திப்பு தேவையில்லை.

மக்கள் எதிர்பார்ப்பது செயல்பாடுகளையும், முடிவுகளையும் மட்டுமே.

அப்போதுதான் இந்த உரையாடல்கள் ஜனநாயகத்தை வலுப்படுத்தியதாக வரலாறு பதிவு செய்யும்.









# FINMA விசாரணையில் Zurich Insurance

சுவிட்சர்லாந்தின் Zurich Insurance நிறுவனத்திற்கு எதிராக நிதி மேற்பார்வை அமைப்பான FINMA விசாரணை நடத்தி வருகிறது.

தொழில்சார் ஓய்வூதியம் மற்றும் நிறுவன காப்புறுதித் திட்டங்களில், FINMA&வுடன் ஒப்புக்கொள்ளப்பட்ட விலையை விட குறைந்த கட்டணத்தில் சில காப்புறுதிகள் விற்கப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மேலும், குறைபாடுகளைச் சரிசெய்ய வழங்கப்பட்ட உத்தரவுகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாததால், சம்பந்தப்பட்ட பிரிவில் புதிய காப்புறுதி விற்பனைக்கு FINMA தற்காலிக தடை விதித்துள்ளது.

இந்த விவகாரம் குழுமத்தின் நிதி நிலைக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது என Zurich தெரிவித்துள்ள போதிலும், நிறுவனத்தின் நம்பகத்தன்மை மற்றும் நற்பெயருக்கு இது சவாலாக அமைந்துள்ளது.

# சூரிக் நகரில் பலருக்கும் தெரியாத 10 அழகிய பசுமைப் பூங்காக்கள்




சுவிட்சர்லாந்தின் சூரிக் நகரில் கோடை வெப்பம் அதிகரித்து வரும் நிலையில், கூட்டம் நிறைந்த ஏரிக் கரைகள் மற்றும் பிரபல பூங்காக்களைத் தவிர்த்து அமைதியாக இயற்கையை ரசிக்க விரும்புவோருக் காக, அதிகம் அறியப்படாத 10 சிறந்த பசுமைப் பகுதிகளை இங்கே அறிமுகப்படுத்துகிறோம்.

### 1. வில்லா டோப்லர் பூங்கா (Villa Tobler)

சூரிக் பழைய நகரில் அமைந்துள்ள இந்த சிறிய வரலாற்றுப் பூங்காவில் அழகிய மலர்த் தோட்டங் கள், அரிய தாவரங்கள் மற்றும் தங்க அலங்காரங் களுடன் கூடிய டிராகன் நீரூற்று காணப்படுகின்றன. கலை மற்றும் இயற்கையை விரும்புவோருக்கு இது சிறந்த இடமாகும்.

Winkelwiese 4, 8001 Zrich

### 2. வில்லா ஹோஹன்ப்யூல் (Villa Hohenbhl)

Stadelhofen ரயில் நிலையத்திற்கு மேலே அமைந்துள்ள இந்தப் பூங்காவில் அழகிய நகரக் காட்சி, பழமையான சுவர்கள், சிறிய மண்டபம் மற் றும் பழமரங்கள் உள்ளன. அமைதியான நடைப்ப யணத்திற்கு ஏற்ற இடம்.

Hohenbhlstrasse 15, 8032 Zrich

### 3. வில்லா ப்ளாய்லர் (Villa Bleuler)

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் தோட்டம் இரவு நேரங்களில் மின்மினிப் பூச்சிகளை (Glow-worms) காணக்கூடிய அரிய இடமாகும். ஜூலை இறுதியில் அவற்றைப் பார்ப்பதற்கான வாய்ப்பு அதிகம்.

Zollikerstrasse 32, 8008 Zrich

### 4. பட்டும்பா பூங்கா (Patumbah Park)

சுமாத்திராவில் புகையிலைத் தோட்டங்களால் செல்வந்தரான கார்ல் க்ரோப் உருவாக்கிய இந் தப் பூங்காவில் நீரூற்றுகள், மலர்த் தோட்டங்கள் மற்றும் பழமையான மண்டபங்கள் காணப்படு கின்றன. 2013 முதல் பொதுமக்களுக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

Zollikerstrasse 128, 8008 Zrich

### 5. நொய்ம்யூன்ஸ்டர் பூங்கா (Neumnsteranlage)

1916 வரை கல்லறையாக இருந்த இந்தப் பகுதி பின்னர் அழகிய பூங்காவாக மாற்றப்பட்டது. பசுமை புல்வெளி, நடைபாதைகள் மற்றும் ஓய்வெடுக்க இருக்கைகள் உள்ளன.

Neumnsterstrasse 12, 8008 Zrich

**6. குஸ்டாவ்-அம்மான் பூங்கா (Gustav&Ammann&Park)**

Oerlikon பகுதியில் அமைந்துள்ள இந்தச் சிறிய பூங்காவின் மையத்தில் குளமும் அதன் மீது நடந்து செல்ல வட்டக்கற்களும் உள்ளன. அமைதியான சூழலை விரும்புவோருக்கு ஏற்ற இடம்.

Langwiesstrasse 30, 8050 Zrich

**7. பெக்கன்ஹோஃப் பூங்கா (Parkanlage Beckenhof)**

பெரிய மரங்கள், விளையாட்டு மைதானம், ஓய்வெடுக்க இருக்கைகள் மற்றும் வசந்த காலத்தில் மலரும் துலிப் பூக்கள் ஆகியவற்றால் இந்தப் பூங்கா பிரபலமானது. சமீபத்தில் முழுமையாக புதுப்பிக்கப்பட்டுள்ளது.

Beckenhofstrasse 29/37, 8006 Zrich

**8. க்ளோப்ஸ்டாக் புல்வெளி (Klopstockwiese)**

மலைமேல் அமைந்துள்ள இந்தப் பசுமைப் பகுதி குடும்பங்களுக்கும் குழந்தைகளுக்கும் மிகவும் ஏற்றது. கோடையில் விளையாட்டுக்கும் குளிர்காலத்தில் பனிச்சறுக்கலுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

Klopstockstrasse 23, 8002 Zrich

**9. ரெக்பெர்க் தோட்டம் (Rechberggarten)**

பரோக் காலத்தைச் சேர்ந்த இந்த வரலாற்றுத் தோட்டத்தில் ஒழுங்காக வடிவமைக்கப்பட்ட மலர்த் தோட்டங்கள், நீரூற்றுகள் மற்றும் அழகிய கட்டிடக் கலை அம்சங்கள் காணப்படுகின்றன.

Hirschengraben 40, 8001 Zrich

**10. மொன்டே டிகெல்மான் (Monte Diggelmann)**

Irchelpark மேற்பகுதியில் அமைந்துள்ள இந்த மறைந்திருக்கும் இடத்திலிருந்து முழு சூரிக் நகரத்தையும் ஒரே பார்வையில் ரசிக்கலாம். பகலும் இரவும் அழகிய காட்சியை வழங்கும் சிறந்த பார்வைத் தளம் இதுவாகும்.

Langensteinenstrasse 71, 8057 Zrich



# விரைவில் திறக்கப்படவுள்ள புதிய பூங்காக்கள்

சூரிக்கில் புதிய Koch&Park தற்போது உருவாக்கப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகள் முடிவடைந்த பிறகு இது முழுமையாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும்.

மேலும் Bellevue அருகிலுள்ள Trittli மற்றும் Winkelwiese பகுதிகளும் எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு திறக்கப்படவுள்ளன.

கோடை வெப்பத்தில் கூட்டம் நிறைந்த இடங்களைத் தவிர்த்து அமைதியாக ஓய்வெடுக்க விரும்புவோர், சூரிக் நகரின் இந்த 10 மறைக்கப்பட்ட பசுமைப் பூங்காக்களைத் தேர்வு செய்யலாம். இயற்கை, வரலாறு, அழகிய காட்சிகள் மற்றும் அமைதியான சூழல் ஆகியவற்றை ஒரே இடத்தில் அனுபவிக்க இவை சிறந்த தேர்வுகளாகும்.